Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 22, 2023

புதன்கிழமை பெப்ரவரி 22, 2023 | ஒளி: 08 கதிர்: 214 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

உள்ளூராட்சி தேர்தலை நடத்த வலியுறுத்தி

# அக்கிராசனத்துக்கு முன்பாகவும் சபை நடுவிலும் ஆர்ப்பாட்டம்

***47 நிமிடங்களில் ஒத்திவைப்பு: ஜே.வி.பி, தமிழ் கட்சிகள் பங்கேற்கவில்லை***



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசாரங்கள் ஓரளவுக்கு சூடுபிடித்துள்ள நிலையிலும் தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது. இந்நிலையில், உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி எதிர்க்கட்சிகள், சபைக்குள் நேற்று (21) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

அக்கிராசனத்தில் சபாநாயகர் அமர்ந்திருந்த போது, அக்கிராசனத்தை மறைத்தவாறு, கைகளில் பதாகைகளை ஏந்தி, சபை நடவடிக்கைகளை குழப்பும் வகையில் எதிர்ப்பில் ஈடுபட்டனர். ஒரிருவர் சபைக்கு நடுவே இறங்கி பதாகைகளுடன் கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ச்சி P2

# மூன்று மாதங்களில் 'கியூஆர்' ஒழியும்

வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும் வகையில் செயற்படுத்தப்பட்டு வரும் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர 'கியூஆர்' முறைமை இன்னும் மூன்று மாதங்களில் நீக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நீதிபதிகளின் சம்பளத்தில் இருந்து

# வரி அறவிடுவதை தடுக்கும் தடையுத்தரவு மீண்டும் நீடிப்பு



மேல் நீதிமன்ற நீதிபதிகளின் மாதாந்த சம்பளத்தில் இருந்து தனிநபர் வருமான வரிகள் அறவிடுவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை பெப்ரவரி 24 ஆம் திகதி வரை நீட்டிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (21)

தொடர்ச்சி P2

தேர்தல் ஒத்திவைக்கப்படுவது

# நாட்டை சர்வாதிகார ஆட்சிக்குள் தள்ளும்

***பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு***



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கான காரணம், அரசாங்கத்தின் மீது அதிகரித்து வரும் பொதுமக்களின் அதிருப்தியாக இருந்தால், தேர்தலை எதிர்கொண்டு அதன் முடிவுகளுக்கு ஏற்ப மாற வேண்டும் என்று தெரிவித்த கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, தேர்தல் ஒத்திவைக்கப்படுவது

தொடர்ச்சி P2

# நிதியில்லை தர்க்கம் நீடிக்கும் அபாயம்



நாட்டு மக்களின் அரசியல் அபிலாஷைகள், தேர்தல் ஊடாகவே வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாக்க, பாராளுமன்றம் தலையிட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார்.

ஜனாதிபதியின் எண்ணப்பாட்டுக்கு அமைய தேர்தல் நடவடிக்கைகளை தீர்மானிக்க முடியாது என்றும் அது ஜனநாயக கொள்கைக்கு எதிரானது என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து செவ்வாய்க்கிழமை (21) உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு சட்டத்தின் ஊடாக தடையேற்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததை தொடர்ந்து நிதி நெருக்கடி என குறிப்பிட்டுக் கொண்டு

தொடர்ச்சி P2

# தேர்தலை நடத்த மஹிந்த அழைப்பு



"உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதப்படுத்த தேவையில்லை. அதை நடத்துமாறு நாங்கள் கேட்கிறோம்" என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகவியலாளர் நேற்று (21) எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கிம்புலாவல கடைகள் அகற்றப்பட மாட்டாது



மாதிவெல, கிம்புலாவல பிரதேசங்களில் உள்ள தெருவோர உணவு விற்பனை நிலையங்கள் ஒருபோதும் அகற்றப்படாது என்று ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில், வியாழக்கிழமை (21) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# "நாளை இருள் சூழாது"



சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாகவும், அதனால் நாளை இருள் சூழப்போவதில்லை எனவும் அமைச்சரவைப் பேச்சாளரும், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# சிலஅரசியல் கட்சிகள் நாடகம் ஆடுகின்றன

***விளையாட முடியாது! மாற்று முன்மொழிவுகளுக்கு வாய்ப்பு! பொருளாதாரப் பிரச்சினையை நீதிமன்றத்தில் தீர்க்க முடியாது!***



சில அரசியல் கட்சிகள், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு மாற்று முன்மொழிவுகளை முன்வைக்காமல், மக்களிடம் பொய் சொல்லி, அரசியல் நாடகம் ஆடுவதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்துடன் எவரும் விளையாட முடியாது எனவும் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# சேபால் அமரசிங்க விடுவிப்பு



கண்டி ஸ்ரீ தலதா மாளிகை குறித்து அவமரியாதையான கருத்துகளை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சேபால் அமரசிங்கவை விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், செவ்வாய்க்கிழமை (21) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

# எதிர்க்கட்சியின் கோரிக்கையை நிராகரித்தது ஆளுங்கட்சி

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை இன்று புதன்கிழமையாவது நடத்த அனுமதிக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் வலியுறுத்தல் மீண்டும் அரச தரப்பினால் நிராகரிக்கப்பட்டு, இரு தரப்புக்கும் இடையில் வாதபிரதிவாதங்கள் இடம்பெற்று, கட்சி தலைவர் கூட்டம் முடிவடைந்தது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தல் மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகள்

தொடர்ச்சி P2

# நிலையியல் கட்டளையின் பிரகாரம் நியமனங்கள்

***கிரியெல்ல எம்.பிக்கு சபாநாயகர் பதில்***



அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவின் தலைவர் பதவி தொடர்பில் கட்சி தலைவர்கள் ஒன்றிணைந்து தீர்மானம் எடுக்க வேண்டும் என்றும்

தொடர்ச்சி P2

கடன்பெறுகை எல்லைக்குள்


# நிதியை வழங்க திறைசேரி செயலாளருக்கு அதிகாரம்

அதிகாரமளிக்கபட்ட கடன்பெறுகை எல்லைக்குள் தேவையான நிதியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திறைசேரி செயலாளருக்கு அதிகாரமளிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

அரசாங்க அச்சகத்துக்கு

# போதிய பாதுகாப்பு இதுவரை இல்லை



அரசாங்க அச்சத்தில், வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கான போதுமான பாதுகாப்பை பொலிஸார் இதுவரை வழங்கவில்லை என்றும் வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகள் மேலும் தாமதமடையும் என்றும் அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி கல்பனா லியனகே தெரிவித்தார்.

தேர்தலுக்கான வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளின் பாதுகாப்புக்காக 65 பொலிஸ் உத்தியோகத்தர்கள்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அக்கிராசனத்துக்கு முன்பாகவும்...

47 நிமிடங்களில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இன்று (22) காலை 9.30 மணிவரை சபையை ஒத்திவைத்தார்.

### தினப்பனிகளுக்கு பின்னர் சர்ச்சை

இதன்போது எதிர்க்கட்சி பிரதம கொறடாவான . லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பி, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு அரச அதிகாரிகள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அவ்வாறு வழங்காது விட்டால் அது சிறைத்தண்டனைக்குரிய குற்றம் எனத் தெரிவித்தார்.இதற்கு ஆதரவாக எதிர்க்கட்சியில் இருக்கும் சமிந்த விஜேசிறி, ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் கருத்து தெரித்தனர்.

அதனைத்தொடர்ந்து விமல் வீரவன்சவும் தேர்தலை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலிறுத்தி கடுமையாக அரசை விமர்சித்துக்கொண்டிருக்கையில், அவரது ஒலிவாங்கி முடக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அவருடன் இணைந்து அவரது கட்சி ஆதரவாளர்கள் சபையில் கூச்சலிட தொடங்கினர். நடுவே இறங்கிய எதிர்க்கட்சிகள், இதன்போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் , பதாகைகளை ஏந்தியவாறு சபை நடுவே இறங்கி “தேர்தலை நடத்து” எனக் கோஷம் எழுப்பிக்கொண்டிருந்தனர். சிங்கள, தமிழ் மொழிகளில் ஏந்தியிருந்த பதாகைகளில் மக்களின் இறைமையை பாதுகாப்போம்க; கள்வர்கள் அரசாங்கமே தேர்தலுக்கு பயமா? தேர்தலை நடத்து என வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இதன்போது ஆளும் தரப்பின் பின்வரிசை உறுப்பினர்கள் ஆசனங்களில் இருந்து எழுந்து நின்று, சபை நடுவில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தை அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தனர். சபையில் இருந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் அமைதியாக இருந்து இடம்பெறும் காட்சிகளை அவதானித்துக் கொண்டிருக்கையில், சபை நடுவில் இருந்த ஏனைய உறுப்பினர்கள் சிலரும் பிரதமருக்கு அருகில் சென்று, “தேர்தலை நடத்து” என கோஷம் எழுப்பினர். இதன்போது பிரதமரும் சிரித்துக்கொண்டு ஏதோ கூறினார்.

### தமிழ்க் கட்சிகள், ஜே வி.பி புறக்கணிப்பு

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபைக்கு வந்திருக்கவில்லை. அதேநேரம், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே வி.பி மற்றும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, க.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியினர் எவரும் சபைக்கு வந்திருக்கவில்லை.

அதேநேரம், ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்களான லக்ஷ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக்க, ஹர்ஷ டி சில்வா, பங்காளி கட்சித்தலைவரில் ஒருவரான மனோ கணேசன் ஆகியோர் தங்களது ஆசங்களில் இருந்தவாறு பதாகைகளை ஏந்திக்கொண்டிருந்தனர்.

ஏனைய பங்காளி கட்சித் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் சபைக்கு வரவில்லை. சுயாதீன எதிர்க்கட்சி எம்.பி க்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், திஸ்ஸ விதாரண ஆகியோரும் ஆசனங்களில் இருந்து எழுந்து நின்று பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

### கொஞ்சிக் குலாவிய அரச, எதிர்க்கட்சியினர்

எதிர்க்கட்சியினர் சபைக்கு நடுவில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, அரச தரப்பு இராஜாங்க அமைச்சர்கள், எம். பிக்கள் பலரும் சபைக்கு நடுவில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் சிரித்துப்பேசினர். அரச தரப்பு எம்.பியான மஹிந்தானந்த அளுத் கமகே, எதிர்க்கட்சி எம்.பிக்களை கட்டித்தழுவி பேசிக்கொண்டிருந்தார். பல எம்.பிக்கள் அலைபேசிகளில் படம் பிடிப்பதிலேயே தீவிர ஆர்வம் காட்டிக்கொண்டிருந்தனர்.

### செங்கோலுக்கு இலக்கு

சபை நடுவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எம்.பிக்கள் மெல்ல, மெல்ல செங்கோலுக்கு அருகில் செல்வதை அவதானித்த படைக்கல சேவிதர் மற்றும் உதவி படைக்கல சேவிதர் ஆகியோர், செங்கோலுக்கு அருகில் சென்று அதைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில், சில எம்.பிக்கள் சபாபீடத்தில் பாராளுமன்ற செயலரின் ஆசனம் உள்ள பகுதிக்குள் நுழைந்து, சபாநாயகரின் ஆசனத்துக்கு எதிரே நின்று பதாகைகளை ஏந்தி எதிர்ப்பு கோஷம் எழுப்பினர். இதன்போது ஆளும் கட்சி பிரதமர கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபாநாகருக்கு அருகில் வந்து ஏதோ தெரிவித்து விட்டு தனது ஆசனத்துக்கு சென்றதும் அமைச்சர் ரமேஷ் பத்திரணவுக்கு ஒலிவாங்கி முடுக்கிவிடப்பட்டது. இதன்போது கடும் சத்தத்துக்கு மத்தியில் தேயிலை சபை சட்டத்தின் 5 பிரேரணைகளையும் சபைக்கு சமர்ப்பித்து, சபையின் அனுமதியை சபாநாயகர் பெற்றுக்கொண்டார்.

### சபை ஒத்திவைப்பு

இதற்கு மத்தியில் ஆளும் கட்சியின் பிரதமகொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எழுந்து, சபை நடவடிக்கையை நாளை (இன்று) புதன்கிழமை காலை 9.30மணி வரை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டார். இதனையடுத்து பாராளுமன்றத்தை நாளை (இன்று) புதன்கிழமை காலை 9.30 மணி வரை ஒத்திவைப்பதாக 10 :17 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

## கிம்புலாவல கடைகள் அகற்றப்பட மாட்டாது

வீதி உணவு முறை வெற்றிகரமான வேலைத்திட்டம் எனவும், எவரும் தடுக்கப்படாத வகையில் அந்த முறையை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

“பாராளுமன்றத்திற்கு அருகில் உள்ள கிம்புலாவல தெருவோர உணவு விற்பனை நிலையங்கள் அகற்றப்படவுள்ளதாக பெரும் வதந்தி பரவியுள்ளது. நீங்கள் அப்படிச் செய்வீர்கள் என்று நான் நம்பவில்லை. அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்” என ஹர்ஷ எம்.பி தெரிவித்தார்.

“போக்குவரத்துச் சட்டத்தின்படி, அனுமதியின்றி நடத்தப்படும் பொருட்களை அகற்றுவதற்காக இது செய்யப்படுகிறது. இந்த இடத்தில் மாத்திரமல்ல, இலங்கை முழுவதிலும் மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் கட்டளைகளுக்கு அமைய வீதி அமைப்பில் இதனைச் செய்து வருகின்றோம். தவிர, தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் எதுவும் செயற்படுத்தப்படவில்லை.

முன்னதாக, அந்தப் பகுதியில் வாகனங்களை நிறுத்தும் இடம் மற்றும் பயணிகள் இடங்கள் தடைப்பட்டதால், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கூட பல முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. பல தடவைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையை அழைத்து வந்து அங்கிருந்து வெளியேறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது” என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவத்தார்.

எம்.பிக்களான ஹர்ஷ டி சில்வா, விமல் வீரவன்ச, ஜே.சி. அலவத்துவல ஆகியோர் தெருவோர உணவு விற்பனை நிலையங்கள் அகற்றப்படுதவற்கு எதிராக கருத்து தெரிவித்தனர்.

இது குறித்து உரையாற்றிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, “எதிர்க்கட்சியில் உள்ள அனைவரும் இதைப் பற்றி பேசுகிறார்கள். இந்தக் கடைகளை அகற்ற நாங்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை நான் பொறுப்பேற்கிறேன்.

உலகில் எல்லா நாடுகளிலும் தெரு உணவு வியாபாரம் உள்ளது. அவர்களிடம் முறையான வழிமுறைகள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் முடிகிறது. அந்த இடங்களை சுத்தம் செய்ய ஒரு முறை உள்ளது. அந்த முறையை பின்பற்றினால் இதை நீக்க மாட்டோம். இது ஒரு வெற்றிகரமான திட்டம்” என்றார்.

## நிதியில்லை தர்க்கம்

தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் தற்போது தடையேற்படுத்தியுள்ளது என்று கூறினார்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலையும், ஜனாதிபதி தேர்தலையும் அரசாங்கம் பிற்போடும். அப்போதும் நிதி இல்லை என்ற தர்க்கமே முன்வைக்கப்படும் என்றார்.

பொதுத்தேர்தலை பிற்போட வேண்டுமானால் அதற்கு மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். மக்கள் வாக்கெடுப்பை நடத்தவும் நிதி இல்லை என்று ஜனாதிபதி குறிப்பிடுவார் என்றும் விமல் எம்.பி சுட்டிக்காட்டினார்.

நிதி இல்லை; ஆகவே பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்ததுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டாலும் ஆச்சரியமடைய வேண்டியதில்லை. அவ்வாறான மனநிலையில் தான் அவர் உள்ளார்.

அரசாங்கத்தின் முறையற்ற வரி கொள்கை, மின்கட்டண அதிகரிப்பு ஆகியவற்றால் நாட்டு மக்கள் விரக்தியடைந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

## சில அரசியல் கட்சிகள் நாடகம் ஆடுகின்றன

வீழ்ச்சியடைந்த நாட்டுக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியத்தை தவிர, உலகில் வேறு எந்த நிறுவனமும் இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, மாற்று முன்மொழிவுகள் இருப்பின், அவற்றை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் திங்கட்கிழமை (20) பிற்பகல் இடம்பெற்ற கண்டி மாவட்ட வர்த்தகர்கள், சட்டத்தரணிகள் ஆகியோருடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சவால்கள் தொடர்பில் தெரியாமல் தான் ஜனாதிபதி பொறுப்பை ஏற்கவில்லை எனவும், தடைகள் வந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நிறுத்தப் போவதில்லை எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றல்ல. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் திகதி குறித்து நீதிமன்றம் முடிவெடுக்கும். ஆனால், பிரதம நீதியரசர் உள்ளிட்ட அனைத்து நீதிபதிகளும் ஒன்றாக அமர்ந்தாலும் கூட நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை, நீதிமன்றத்தில் தீர்க்கக்கூடிய ஒன்றல்ல.

பொருளாதாரத்தை முன்கொண்டு செல்லும் பொறுப்பு பாராளுமன்றத்திற்கே இருக்கிறது. எனவே 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க பாடுபட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டும். தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துள்ள பொருளாதார வேலைத்திட்டத்தின் காரணமாக, கடந்த சில மாதங்களாக இருந்த பொருளாதார நெருக்கடிகள் ஓரளவு குறைந்துள்ளன. 11 மாதங்களுக்கு முன்னர், நாம் இந்த நிலையை எதிர்கொண்டோம். எங்களிடம் எரிபொருள், மின்சாரம், மருந்து எதுவும் இல்லை. ஒரு நாடு என்ற வகையில் நாம் மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டோம். நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் முடங்கியது.

இப்போது எரிபொருள் வரிசைகள் இல்லை; மின்சாரம் உள்ளது. அதன்படி, நாட்டின் பொருளாதாரத்தை முந்தைய நிலையை விட படிப்படியாக சிறந்த நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று பணவீக்கம் உயர்ந்துள்ளது. வட்டி விகிதம் மிக அதிகம். அதனால், வர்த்தக சமூகம் சிரமங்களை எதிர்நோக்குவதை நாம் அறிவோம். சட்டத்தரணிகளும் தங்கள் பணியை மேற்கொள்வதில் சிக்கல்களை சந்திக்க வேண்டியுள்ளது. நாட்டின் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கியுள்ளோம். மேலும் பல பிரச்சினைகள் நமக்கு முன்னால் உள்ளன.

ஒரு நாடு வங்குரோத்தடையும் போது, சர்வதேச நாணய நிதியத்திடம் தான் செல்ல வேண்டும். அதைத் தவிர, ஒரு நாடு வங்குரோத்தடையும் போது உதவி செய்யும் வேறு எந்த அமைப்பும் உலகில் இல்லை. பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு நாடும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியே மீண்டு வந்துள்ளது.

எமது கொள்கைகளை எதிர்ப்பவர்களுக்கும், சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கத் தயாராக உள்ளோம். சர்வதேச நாணய நிதியம் அந்த முன்மொழிவுகளுடன் உடன்படுகிறதா என்பதைப் பார்க்க முடியும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் கடந்த ஒகஸ்ட் மாதம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. அதன்படி, செப்டெம்பரில் அதிகாரிகள் மட்டத்தில் உடன்பாடு காண முடிந்தது. அவர்கள் எமக்கு நடைமுறைப்படுத்த பதினைந்து விடயங்களைக் முன்வைத்தார்கள்.

டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அதனை நடைமுறைப்படுத்த சர்வதேச நாணய நிதியம் கால அவகாசம் வழங்கியது. ஆனால் அன்று அதைச் செய்ய முடியவில்லை. பின்னர் ஜனவரி 31ஆம் திகதி வரை அவகாசம் பெற நடவடிக்கை எடுத்தோம். அப்போதும் அந்த 15 விடயங்களை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை என்றார்.

## மூன்று மாதங்களில் ‘கியூஆர்’ ஒழியும்

நாட்டின் பொருளாதார நிலைமை சீரடைந்தவுடன் போதியளவு எரிபொருள் விநியோகத்தை வழங்க முடியும் என்றும் முன்னர் போன்று எரிபொருளை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## நாட்டை சர்வாதிகார ஆட்சிக்குள் தள்ளும்

இறுதியில் நாட்டை சர்வாதிகார ஆட்சிக்குள் தள்ளும் என்றும் அறிவித்துள்ளார்.

பேராயர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (21) ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப் பேச்சாளர் சிறில் காமினி பெர்னாண்டோ, கர்தினாலின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பை வெளியிட்டார்.

தோல்விக்கு பயந்த கோழையாக வரலாற்றில் இடம் பெறுவதை தவிர்க்கும் புத்திசாலித்தனம் நமது நாட்டின் தலைவர்களுக்கு இருப்பதாக தான் எண்ணுவதாகவும் பேராயர் விசேட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடத்துவதாக அறிவித்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தடுக்க, சில அரச அதிகாரிகள் முயலுவதையும் இது காட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.

## போதிய பாதுகாப்பு இதுவரை இல்லை

தேவைப்படுவதாக திங்கட்கிழமை (20) மாலை வரை பிரதான நுழைவாயிலுக்கான பாதுகாப்புக்காக மாத்திரம் 02 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தாகவும் ஐக்கிய மக்கள் சக்தியால் திங்கட்கிழமை (20) நடத்தப்பட்ட எதிர்ப்பு பேரணி இடம்பெற்றதால் அரசாங்க அச்சகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இதேவேளை, வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிக்கு பாதுகாப்பு வழங்க பொலிஸ் மாஅதிபர் தவறியுள்ளதாகவும் பொலிஸாருக்கு முன்னர் வழங்கப்பட்ட நிதியை விட தோராயமாக மூன்று மடங்கு அதிகமான நிதியை தேர்தலை நடத்துவதற்கு தேவைப்படுவதாக பொலிஸ் மாஅதிபர் அறிவித்தாகவும் தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## நிலையியல் கட்டளையின்...

பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் பிரகாரம் நியமனங்கள் இடம்பெறும் என்று கிரியெல்ல எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பதிலளித்தார்.

பாராளுமன்ற நிலையியல் கட்டளை 121 இன் ஏற்பாடுகள் மற்றும் கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ள ப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, அரசாங்க நிதி தொடர்பான குழுவில் பணியாற்றுவதற்கான உறுப்பினர்களின் பெயர் விபரத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

இதற்கமைய ரவூப் ஹகீம், விஜித ஹேரத், பாட்டலி சம்பிக ரணவக்க, சந்திர வீரக்கொடி, நாலக கொடஹேவா, ஹர்ஷ டி சில்வா, எம்,ஏ.சுமந்திரன், காவிந்த ஜயவர்தன, மயந்த திஸாநாயக்க,ஹர்ஷன ராஜகருண ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## எதிர்க்கட்சியின்...

தொடர்பில் நேற்று எதிர்க்கட்சிகள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை கோரியிருந்தன.

அதனை நிராகரித்த அரச தரப்பு ஏற்கெனவே ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கியிருந்த பிரேரணைகளை மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்று பதிலளித்ததை அடுத்து இது தொடர்பில் கூடி ஆராய உடனடியாக கட்சித் தலைவர் கூட்டத்தை கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் நேற்று சபாநாயகரிடம் வலியுறுத்தின.

இதனையடுத்து எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சபாநாயகர் நேற்று பிற்பகல் 2 மணியளவில் கட்சி தலைவர் கூட்டத்தை கூட்டுவதாக அறிவித்து, கூட்டத்தை கூட்டிய போதே இரண்டாவது முறையாகவும் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நடத்த ஆளும் கட்சி எதிர்த்தது.

## வரி அறவிடுவதை தடுக்கும் தடையுத்தரவு மீண்டும் நீட்டிப்பு

இலங்கை நீதித்துறை அதிகாரிகள் சங்கம் மற்றும் இலங்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கம் தாக்கல் செய்த மனுக்களை பரிசீலிக்கும் வரை குறித்த தடையுத்தரவை நீட்டிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிபதிகளின் சம்பளத்தில் இருந்து இதுபோன்ற வரியை அறவிடுவது பொருத்தமற்றது என்றும், அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்றும் குறித்த மனுகள் தாக்கல் செய்யப்பட்டன. பிரதம கணக்காளர் மற்றும் நீதியமைச்சின் செயலாளர் ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

## “நாளை இருள் சூழாது”

நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக அவர்கள் வழங்கிய அனைத்து நிபந்தனைகளையும் அரசாங்கம் பூர்த்தி செய்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பு போன்ற விவகாரங்கள் தொடர்பாக, அமெரிக்கா, இந்தியா, சீனா, ஜப்பான், பாரிஸ் உதவிக் குழு போன்ற தரப்பினரிடம் இருந்து தமக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும், அது படுகுழியில் விழுவதைத் தடுக்க தலையிடுவதாகவும் அமைச்சர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (21) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெறும் சில செயற்பாடுகளால் ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகை கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடிய குறிகாட்டிகளின் பிரகாரமே தவிர, சர்வதேச உடன்படிக்கைகளை எட்டி உதைத்து ஆட்சியை முன்னெடுக்கப்போவதில்லை என்றார்.

## சேபால் அமரசிங்க விடுவிப்பு

சேபால் அமரசிங்கவின் சட்டத்தரணி தர்ஷன குருப்பு தனது சேவை பெறுநர், பகிரங்க மன்னிப்புக் கோர விரும்புவதாகத் தெரிவித்து நீண்ட விளக்கத்தை வழங்கியதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் மன்றுக்கு அறிவித்தார்.

குறித்த விடயத்தை பரிசீலித்த சட்டமா அதிபர், சேபால் அமரசிங்கவுக்கு எதிரான வழக்கை தொடர்வதில்லை என்று தீர்மானித்ததாகவும் திலீப பீரிஸ் அறிவித்தார்.

மேலும், இவ்வாறான குற்றங்களை மீண்டும் செய்யப் போவதில்லை என்று சேபால் அமரசிங்க பகிரங்க மன்னிப்பு கோரியதை அடுத்து, அவரை விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

தலதா மாளிகை குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டதை அடுத்து, இவ்விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தார்.

## நிதியை வழங்க...

2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் 2023 நிதியாண்டுக்கான 4,979 பில்லியன் ரூபாயை விஞ்சாத கடன் பெறுகைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த கடன் பெறுகைக்கான எல்லை, நிதியாண்டில் கடன்களை மீளச் செலுத்தல், வட்டி செலுத்தல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான நிதியொதுக்கீடுகள் மீளவும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

நிதியாண்டுக்கான மொத்தக் கடன் பெறுகைகளை 4,979 பில்லியன் ரூபாயை விஞ்சாத உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதுடன், உள்ளூர் மூலங்களிலிருந்து 3,526 பில்லியன் ரூபாய் மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து 1,453 பில்லியன் ரூபாயையும் பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் மாதத்தில் இலங்கை அரசு வெளிநாட்டு கடன் சேவைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள கொள்கைக்கு இணங்கியொழுகி, 2023 நிதியாண்டில் முதல் 06 மாதங்களில் வெளிநாட்டு நாணயத்தில் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் சேவை செலுத்தல்கள் 2,609 மில்லியன் அமெ. டொலர் ஆகும். குறித்த 2,069 மில்லியன் அமெ. டொலர் வெளிநாட்டு கடன் தவணையை செலுத்துவதற்கும், 540 மில்லியன் அமெ. டொலர் வட்டியை செலுத்துவதற்குமாகும்.

# 3,000 கோடி ரூபாய் செலவில் 3 கோடி பாடப் புத்தகங்கள்

2023 இன் புதிய கல்வி ஆண்டுக்கான முதலாம் தவணை மார்ச் மாதம் 27ஆம் திகதி ஆரம்பிக்க உள்ள நிலையில், நாட்டின் அனைத்து அரச பாடசாலைகளுக்குமாக 3,000 கோடி ரூபாய் செலவில் மூன்று கோடியே 7 இலட்சம் பாடப் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு அதன் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

உரிய நேரத்தில் பாடப் புத்தகங்கள் அனைத்து பாடசாலைகளுக்கும் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் ஹோமாகமை களஞ்சியசாலையிலிருந்து பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் ஆகியோரின் தலைமையில் இடம் பெற்றது.

பாடசாலைகளுக்கு புதிய பாடப் புத்தகங்களின் விநியோக நடவடிக்கை தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மேலும் கூறுகையில், நாடு முழுவதுமாக 10,146 அரச பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் மாகாண பாடசாலைகளாக 9,750 தேசிய பாடசாலைகளாக 396 உம் அடங்குகின்றன.

மேலும் சிங்கள மொழி மூலம் 6,323 பாடசாலைகளும் தமிழ் பாடசாலைகளாக 2,084 உம் முஸ்லிம் பாடசாலைகளாக 942உம் இரு மொழி பாடசாலைகளாக 797உம் என்ற ரீதியில் அரச பாடசாலைகள் இயங்கி வருகின்றன. மேற்படி 10,146 அரச பாடசாலைகளில் 885 பெருந்தோட்டப் பாடசாலைகளும் மும்மொழியிலான



35 உயர்தர பாடசாலைகளும் உள்ளடங்குகின்றன.

10,146 அரச பாடசாலைகளிலும் தற்போது அண்ணளவாக 40 இலட்சத்து 50 ஆயிரம் மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இவர்களில் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக மூன்று இலட்சத்து 20 ஆயிரம் மாணவ மாணவியர் தயாராகி வருகின்றனர்.

இந்நிலையியே புதிய கல்வி ஆண்டுக்காக அரசாங்கம் மூவாயிரம் கோடி ரூபாயை செலவிட்டு, மூன்று கோடியே 20 இலட்சம் பாடப் புத்தகங்களை அச்சிட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மாணவர்களின் எதிர்காலம் கருதி, அரசாங்கம் பெருந்தொகை பணத்தை செலவிட்டு புதிய பாடப் புத்தகங்களை அச்சிட்டிருக்கிறது.

மேலும், பாடப் புத்தகங்கள் பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெறுவதற்கான செயற்றிட்டத்தையும் கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளது. எனவே அதிபர்கள், அதிகாரிகள் ஒத்துழைத்து, பாடப் புத்தகங்களை தங்களது அதிகாரத்தில் உள்ள பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு சிரமம் பாராது செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# திருகோணமலை, பொலன்னறுவைக்கு ஜப்பானிய தூதுவர் விஜயம்

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, 2023 பெப்ரவரி 15 முதல் 18 ஆம் திகதி வரையில் திருகோணமலை மற்றும் பொலன்நறுவை மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இந்த இரு மாவட்டங்களுக்கும் இவரின் முதலாவது பயணம் இதுவாக அமைந்திருந்தது.

தூதுவர் திருகோணமலை விஜயத்தின் போது, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராத யஹம்பத், ரியர் அட்மிரல் தம்மிக குமார மற்றும் பிரதேசத்தின் வணிகர் கழக அங்கத்தவர்கள், சமயத் தலைவர்கள் போன்ற இதர முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். புதுப்பிக்கத்தக்க வலு, உற்பத்தி மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் திருகோணமலையில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகள் பற்றி ஆளுநர் யஹம்பத்துடன் தூதுவர் கலந்துரையாடினார். ரியர் அட்மிரல் குமாரவுடனான சந்திப்பின் போது, ஜப்பானிய கடல்சார் சுய பாதுகாப்பு செயலணி மற்றும் இலங்கை கடற்படை ஆகியவற்றுக்கிடையே எதிர்காலத்தில் கைகோர்த்த செயற்பாடுகளுக்கான வாய்ப்புகள் தொடர்பில் பேசப்பட்டிருந்தது.

திருகோணமலையில் தங்கியிருந்த போது, ஜப்பானின் Peace Winds அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த



சேதன விழிப்புணர்வு அமர்வில் தூதுவர் மிசுகொஷி கலந்து கொண்டார். இதன் போது, அப்பிரதேசத்தில் சேதன விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுடன் கலந்துரையாடினார். அவர்கள் மத்தியில் உரையாற்றுகையில், நாட்டில் சேதன விவசாயத்தை ஊக்குவிப்பது, வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) எய்துவதற்கு ஜப்பானிய அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவை உறுதி செய்திருந்தார்.

பெப்ரவரி 17 ஆம் திகதி, திருகோணமலை துறைமுக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஜப்பானிய அரசாங்கத்தின் ரூ. 2.63 பில்லியன் பெறுமதியான உதவியில் நிறுவப்பட்ட இரவு நேர திசைகாட்டிக் கட்டமைப்பைக் கையளிக்கும் நிகழ்வில் தூதுவர் மிசுகொஷி பங்கேற்றிருந்தார்.

# கற்பிட்டியில் பீடி இலைகள் மீட்பு

■ ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி, சம்மட்டிவாடி பகுதியில் கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்ட ஒரு கோடிக்கும் அதிக பெறுமதியுடைய பீடி இலைகள் நேற்று (20) கைப்பற்றப்பட்டன.

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக, கேரளா கஞ்சா கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, சம்மட்டவாடி கடற்கரைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போதே, குறித்த பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டன.



இதன்போது, 19 உரப்பைகளில் 760 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டதாகவும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் கற்பிட்டி பொலிஸார் தெரித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில், கற்பிட்டி பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## ‘கலார்ப்பணா’

‘கலார்ப்பணா’ நாட்டிய நிலையத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ‘கலார்ப்பணம்’ நூல் வெளியீடும் ‘கலார்ப்பணா’ நாட்டிய நிலையத்தின் இயக்குநர் கலாவித்தகர், நடனக்கலைமாமணி திருமதி சசிகலாராணி ஜெயராம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (19) சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இராஜதுரை அரங்கில் நடைபெற்றது.

‘சதங்கை நாதாம்ருதம் – 02’ நிகழ்வுக்கு ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு, இராமகிருஷ்ண மிஷன் பொதுமுகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹாராஜும் பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க. விமலநாதனும் கலந்துகொண்டனர்.

கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் தி. சரவணபவன், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கெனடி, பிரதேச செயலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது, ‘கலார்ப்பணம்’ நூல், அதன் ஆசிரியர் திருமதி சசிகலாராணி ஜெயராமால் வெளியிட்டு வைக்கப்பட்டது. அத்துடன் ‘கல்லூர் பெருவலம்’ எனும் பல்திறன் இறுவெட்டும் வெளியிடப்பட்டது.

எம்.எஸ்.எம் நூர்தீன்

# பாராளுமன்ற அலுவல்கள் குழுவுக்கு 10 பேர் நியமனம்

பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு உறுப்பினர்களாக 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 115 இன் ஏற்பாடுகள் மற்றும் கடந்த 10 (பெப்ரவரி) ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பவற்றுக்கு அமையாவாக, பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டவர்களின் பெயர் விவரத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (21) சபைக்கு அறிவித்தார்.

இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக, அநுர குமார திஸாநாயக்க, ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அதுகோரல மனோ கனேசன், எரான் விக்கிரமரத்ன, பி. கஜேந்திரகுமார், எம்.ஏ சுமந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டு உள்ளார்கள்.

# ரஷ்ய தூதுக்குழுவினர் பிரதி சபாநாயகரைச் சந்தித்தனர்

ரஷ்யாவின் விளாடிமிர் பிராந்தியத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சர் சிடொரின் செர்கி மற்றும் விளாடிமிர் பிராந்தியத்தின் கமேஷ்கோவோ மாவட்டத்தின் நிர்வாகத் தலைவர் குர்கன்ஸ்கி அரியாடோலி ஆகியோர் அடங்கிய ரஷ்ய தூதுக் குழுவினர் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவை வெள்ளிக்கிழமை (17) பாராளுமன்றத்தில் சந்தித்தனர்.

இலங்கைக்கு வருகைதரும் ரஷ்ய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, இந்நாட்டில் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பது உள்ளிட்ட இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து இங்கு விவாதிக்கப்பட்டது. ‘இலங்கையின் நண்பன்’ என்ற வகையில் அதிகபட்ச ஆதரவை வழங்க ரஷ்யா எதிர்பார்ப்பதாக விளாடிமிர் பிராந்திய பொருளாதார அமைச்சர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, தூதுக் குழுவினர் பாராளுமன்ற வளாகத்தைப் பார்வையிட்டனர். இந்நிகழ்வில், கொழும்பில் உள்ள ரஷ்யன் இல்லத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி புத்தபிரியா ராமநாயக்கவும் கலந்துகொண்டார்.



“மட்டக்களப்பு மாவட்டத்தில்

# தொழுநோயை விரைவில் கட்டுப்படுத்துவோம்”

## டொக்டர் குணசிங்கம் சுகுணன்




■ க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வைத்தியர்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் மூலம் தொழுநோயை விரைவில் கட்டுப்படுத்துவோம் என பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள சேவைகள் பணிப்பாளர் டொக்டர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடம், தொழுநோய்க்கான இலங்கையிலுள்ள அமைப்புகள், பிரித்தானிய தொழுநோய் அமைப்பு போன்றவற்றுடன் இணைந்து, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் தலைமையில், அவரது பணிமனையில் தொழுநோய் கருத்தரங்கு, திங்கட்கிழமை (20) நடைபெற்றது. இங்கு கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் கூறியதாவது;

மட்டக்களப்பில் கடந்த வருடம் மிக அதிகமாக கண்டுபிடிக்கப்பட்ட பெரியவர்களின், சிறுவர்களின் தொழுநோய் எண்ணிக்கையைத் தொடர்ந்து, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஒரு மிகப்பெரிய பாய்ச்சலை முன்னெடுத்தது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்தியா சென்று, பயிற்சியை பூர்த்தி செய்ததுடன் பிரித்தானிய தொழுநோய் அமைப்பையும் மட்டக்களப்புக்கு வருமாறும் அழைப்பு விடுத்திருந்தோம்.

மட்டக்களப்பில் அதிகரித்துவரும் தொழுநோயை கட்டுப்படுத்துவதற்கு, இன்றைய கருத்தரங்கில் இணைந்துகொண்ட அனைவரும், தமது பங்களிப்பை வழங்குவதாக உறுதியளித்திருந்தனர். விரைவில் நாம் ஒருங்கிணைந்த முறையில் தொழுநோயை மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டுப்படுத்துவோம் என டொக்டர் கு. சுகுணன் தெரிவித்தார்.



கொக்குத்தொடுவாயில்

# கால்நடைகளை திருட வந்தவர்கள் உரிமையாளரை கட்டிவைத்து தாக்கினர்

■ செ. கீதாஞ்சன்



முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய், சிவந்தாமுறிப்பு பகுதியில், பெரும்பான்மை இனத்தவர்கள், தமிழ் கால்நடை வளர்ப்பாளருக்குச் சொந்தமான கால்நடைகளைத் திருடமுற்பட்டபோது, திருட்டு முயற்சியைத் தடுத்த தமிழ் கால்நடை வளர்ப்பாளர், பெரும்பான்மை இனத்தவர்களால் கட்டிவைத்து தாக்கப்பட்டார். அவர் தற்போது முல்லைத்தீவு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குத்தொடுவாய் பகுதியில் வசித்துவரும் சிவக்கொழுந்து கந்தசாமி என்ற கால்நடை வளர்ப்பாளரே இவ்வாறு பெரும்பான்மை இனத்தவர்களால் திங்கட்கிழமை (20) தாக்கப்பட்டார்.

கொக்குத்தொடுவாய் பகுதி தமிழ் மக்களின் கால்நடைகளை, வெலிஓயா பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் தொடர்ச்சியாக திருடி வருவதாக தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர். கால்நடைகள் திருடப்படும்போது தடுக்கின்ற தமிழ் மக்களை, பெரும்பான்மை இனத்தவர்கள் தாக்குகின்ற சம்பவங்கள், தொடர்சியாக இடம்பெற்று வருவதாகவும் அப்பகுதி தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள், இனங்களுக்கிடையில் முறுகலைத் தோற்றுவிக்கும் அபாயம் எழுந்துள்ளதால், இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடம் கொக்குத்தொடுவாய் மக்கள் முறையிட்டுள்ளனர்.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள குறித்த நபரை, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டதுடன், நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

## அருட்திரு தமிழ் நேசன் அடிகளாருக்கு 'எழுத்து மற்றும் ஆய்வு சார் ஆளுமைக்கான' விருது

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

அமெரிக்காவில் உள்ள கலிபோனியா பெரு நகரை தளமாகக் கொண்டு இயங்கும் SCSDO என அழைக்கப்படும் 'அறிவியல் மற்றும் சமூக மேம்பாட்டு நிறுவனம்' ஞாயிற்றுக்கிழமை (19), வவுனியாவில் நடத்திய நிகழ்வின் போது, மன்னார் மடுமாதா சிறிய குருமட இயக்குநர் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார், துறைசார் ஆளுமைக்கான விருதைப் பெற்றுக்கொண்டதுடன் முடி சூட்டியும் கௌரவிக்கப்பட்டார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 47 துறைசார் ஆளுமைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்ட



இந்நிகழ்வுக்கு பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி முதன்மை விருந்தினராகவும் வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர், வவுனியா அரசாங்க அதிபர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினர்.

## பாடசாலைக்கு நூலகக் கட்டடம் வேண்டும்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி,வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் நூலகத்துக்கான கட்டடம் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. கிளிநொச்சி மேற்கில் உள்ள முக்கியமான இப்பாடசாலையில் 268 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். ஆண்டு 01 தொடக்கம் ஆண்டு 13 வரையான வகுப்புகள் உள்ளன.

இப்பாடசாலையில் ஆரம்பப் பிரிவு, நாடகமும் அரங்கியலும், சைவ சமயம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. மேலும், இந்த மகா வித்தியாலயத்துக்கு நூலகக் கட்டடத்தை உருவாக்கி, ஆசிரியர் பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்யுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில் ஆகிய பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்கு பஸ் சேவைகளும் இடம்பெற வேண்டும் எனவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.





## யாழ். பல்கலைக்கழகத்தில் 'கலைவாரம்'

### நாளை, கைலாசபதி அரங்கில் மாபெரும் கலைநிகழ்வு

■ நிதர்சன் வினோத்

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்படும் 'கலைவாரம்' நான்கு வருடங்களின் பின்னர், இவ்வருடம் மீள வெகு விமர்சையாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ், பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களிடையே கலை, கலாசார, பண்பாட்டு, விளையாட்டு திறன்களை ஊக்குவிக்கும் முகமாக, கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால், 20 வருடங்களுக்கு மேலாக குறித்த நிகழ்வு நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இம்முறை கலைவார ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் ஜெயராசா ஜெனீபன் தலைமையில், யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரா கோவில் முன்றலில், சமயரீதியான அனுஷ்டானங்களுடன் ஆரம்பமான நிகழ்வு, தமிழர்களின் பூர்வீக கலைகளான மயிலாட்டம், பொம்மலாட்டம், பறையிசை ஆகிய கலை வடிவங்களைத் தாங்கிய வண்ணம், பரமேஸ்வரா சந்தி ஊடாக, தபால் பெட்டி சந்தியை அடைந்து, பின்னர் பல்கலைக்கழக பிரதான மைதானத்தைச் சென்றடைந்தது.

இதன்பொழுது, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம், யாழ். பல்கலைக்கழக பிரதி பதிவாளர் அனுசியா, கலைப்பீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

தொடர்சியாக, ஒருவாரம் மாணவர்களிடையே கலை, கலாசார, பண்பாட்டு விளையாட்டு சார் போட்டிகள் நடத்தப்பட்டு, நாளை (23) மாலை கைலாசபதி கலையரங்கில் மாபெரும் கலைநிகழ்வு இடம்பெறவுள்ளது.

வற்றாப்பளை பாடசாலை

## குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு



■ நடராசா கிருஸ்ணகுமார்

வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் நிலவிய குடிநீர் நெருக்கடிக்கு நேற்று முன்தினம் (20) தீர்வு காணப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் 750 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் நிலையில், பாடசாலையில் உள்ள கிணறு, குடிநீருக்கு பயன்படுத்த முடியாத நிலையில், பாடசாலைக்கு அருகில் உள்ள வீட்டில் இருந்தே மாணவர்களும் ஆசிரியர்களும் குடிநீரைப் பெற்று வந்தார்கள்.

இந்நிலையில், வற்றாப்பளை நண்பர்கள் வட்டம் ஊடாக ரூபாய் ஒன்றரை இலட்சம் நிதி செலவில் குடிநீருக்கான இணைப்புகள் வழங்கப்பட்டு, முல்லைத்தீவு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் பாடசாலைக்கான குடிநீர் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது. பாடசாலைகளில் குடிநீர் வசதியை உருவாக்கித் தருமாறு பெற்றோர்கள் முல்லைத்தீவு, துணுக்காய் வலய கல்வி பணிமனைகளில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீங்கள் செலுத்திய வரிப்பணம்

# மாநகர சபைக்கு சென்றடைந்ததா என்பதை உறுதிப்படுத்துங்கள்

### வேண்டுகோள் விடுக்கிறார் எம்.ஐ.எம் அப்துல் மனாப்

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை மாநகர சபை நிதிப்பிரிவில், மக்களின் வரிப்பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டு, நிதிப்பிரிவில் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன். இன்னும் பல மக்களின் வரிப்பணமும் மோசடி செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய, மக்கள் கல்முனை மாநகர நிதிப்பிரிவில் தமது விசாரணைகளை மேற்கொள்வது பொருத்தமானதாக அமையும் என, கல்முனை மாநகர சபை ஊழல்களுக்கு எதிராக குரலெழுப்பி வந்த, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்முனை அமைப்பாளருமான எம்.ஐ.எம் அப்துல் மனாப் தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் (20) கல்முனையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், தொடர்ந்தும் தெரிவித்ததாவது: கடந்த காலங்களில் இருந்த அதிகாரிகள், தொகுதி பாராளுமன்ற உறுப்பினர், சபையை ஆளும் கட்சியின் தலைவர் போன்றோரின் அனுசரணையுடன் ஊழல்கள் இடம்பெற்று வந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு, கல்முனை மாநகரில் 100 மீற்றர் வீதிக்கு 75 வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டதாக தெரிவித்து இடம்பெற்ற ஊழல் அடங்கலாக, திரும்பும் திசை எல்லாம் ஊழல் நிறைந்தே காணப்படுகின்றது. கல்முனை ஆணையாளர், இவ்வாறான மோசடிக்காரர்களை அடையாளம் கண்டு, பணி இடைநிறுத்தம் செய்திருப்பது பாராட்டப்பட வேண்டும்.

பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் செலுத்தப்படும் மக்களின் வரிப்பணம், கொள்ளையர்களினதும் திருடர்களினதும் வயிற்றுக்குள் செல்ல அனுமதிக்க முடியாது. மக்களின் வரிப்பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், அசௌகரியங்களை தவிர்க்கும் பொருட்டு, கல்முனை மாநகர நிதிப் பிரிவுக்கு, தமது வரி கொடுப்பனவுகள் சென்றடைந்துள்ளதா என்பது பற்றிய விசாரணைகளை மேற்கொள்வது பொருத்தமானதாக அமையும் என்றார்.



## 'பலோமீ' திட்டகைநூல் வெளியீடு

சம்மாந்துறைக் கல்வி வலயத்தின் 'பலோமீ' வருடாந்த அமலாக்க திட்ட கைநூல் வெளியீடு, நேற்று (21) வலய கல்வி பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது.

(காரைதீவு சகா)

ஐந்து இலட்சம் ரூபாய் பணத்தை

# வீதியில் கண்டெடுத்து ஒப்படைத்த இளைஞனைப் பாராட்டிய பொலிஸார்

■ பாறுக் ஷிஹான்

வீதியில் கண்டெடுக்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபாய் பணம், உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் பணப்பையை கண்டெடுத்து ஒப்படைத்த இளைஞனை கல்முனை தலைமையக பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

இச்சம்பவம், கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் நேற்று (21) இடம்பெற்றது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட அரச வங்கிக்கு திங்கட்கிழமை (20) ரூபாய் 35 இலட்சம் பணத்தை, வியாபார நடவடிக்கைக்காக வைப்பிலிடுவதற்கு வர்த்தகர் ஒருவர் சென்றிருக்கின்றார். வங்கிக்குள் சென்று குறித்த தொகையை வைப்பிலிடுவதற்கு தயாரான நிலையில், கொண்டு வந்திருந்த பணத்தொகையில் ரூபாய் ஐந்து இலட்சம் காணாமல்போயுள்ளதை அறிந்துள்ளார்.

இந்நிலையில், உரிய வங்கி மேலாளருக்கு அறிவித்து விட்டு, வங்கியின் அருகில் இருந்த சி.சி. டி.வி கமெரா காணொளிகளை அவதானித்தபோது, தவறவிடப்பட்ட பணத்தை ஒருவர் எடுத்து செல்வது அவதானிக்கப்பட்டது.

அதற்கமைய, நேற்று (21) கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு வழங்குவதற்காக சென்றபோது, பணத்தைக் கண்டெடுத்த



கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த இளைஞனும், பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு வருகை தந்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மேலும், ஐந்து இலட்சம் ரூபாய் பணத்தைத் தொலைத்தவரும் பொலிஸார் முன்னிலையில் தான் கொண்டு வந்த ஆதாரங்களை சமர்ப்பித்திருந்ததை அடுத்து, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல் புத்திகவின் வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ வாஹிட் முன்னிலையில் காணாமல் போன பணம், உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# மருத்துவ பொருட்கள் கையளிப்பு

■ வ. சக்தி

வன்னி ஹோப் அவுஸ்திரேலியா மற்றும் IMHO நிறுவனத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை புற்றுநோய் பிரிவுக்கு மருத்துவ பொருட்கள் வெள்ளிக்கிழமை (17) கையளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவால் வன்னி ஹோப் நிறுவனத்துக்கு விடுத்த விசேட வேண்டுகோளின் அடிப்படையில், மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பொருட்கள் ஒரு தொகை, வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.



ரி.எம் பாரிஸ், வைத்தியாசாலையின் பணிப்பாளர் கலா ரஞ்சனி கணேசலிங்கத்திடம் கையளித்தார்.

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள நல்லையா பவுண்டேசனின் நிதி அனுசரணையில் இம்மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா பொருட்கள் முதல் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டன.

# தேர்தலுக்காக ‘டெலிபோன்’ தொடர்ந்தும் ஒலிக்கும்

■ மொஹொமட் ஆஸிக்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வைப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் போராட்டத்தை நடத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்த பின்னர் அதனை பிற்போடுவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் கண்டனத்துக்கு உரியது” என்றார்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தலை நடத்துவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து பாரிய போராட்டங்களை நடத்தும். தற்போதைய கூட்டு அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் எவ்வித ஆதரவும் இல்லை. அதனால்தான், அவர்கள் தேர்தலை பிற்போட முயலுகின்றனர்.

பணம் இல்லாததே காரணம் என்று அரசாங்கம் கூறினாலும் நிதி பற்றாக்குறை தொடர்பிலான எவ்விதமான அடையாளங்களையும் மக்கள் காணவில்லை. அன்றாட தேவைகள் அனைத்துக்கும், அரசாங்கம் நிதியை செலவிடுகின்றது. ஆகையால் நிதி இல்லாததுதான் பிரச்சினை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் சின்னம் ‘டெலிபோன்’ என்பது குறிப்பிடத்தக்கது.



## முஸ்லிம் பெண்கள் சங்கம் ஸ்தாபிப்பு



■ பாலித ஆரியவங்ச

பதுளையில் முதல் தடவையாக முஸ்லிம் பெண்கள் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு சுயதொழில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல், அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனைச் செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பது என்பன இந்தச் சங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

பதுளை வை.எம்.எம்.ஏ மண்டபத்தில், 19, 20 ஆம் திகதிகளில், உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

“இந்த வேலைத்திட்டம் பதுளை மாவட்டம் முழுவதிலும் முன்னெடுக்கப்படும். வறுமையில் இருக்கும் முஸ்லிம் பெண்களை ஊக்கப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும்” என்று அகில இலங்கை முஸ்லிம் சம்மேளனத்தின் தேசிய தலைவர் இஷான் ஏ ஹமீட் தெரிவித்தார்.

## காதலி துஷ்பிரயோகம் காதலன் கைது

■ சுமணசிறி குணத்திலக்க

10ஆம் வகுப்பில் கல்வி பயிலும் 15 வயதான தன்னுடைய காதலியை, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ், அவருடைய காதலன் கைது செய்யப்பட்டுள்ளார் என தனமன்வில பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 18ஆம் திகதி காலை, டிமோ பட்டா லொறியில் காதலியின் வீட்டுக்கு வந்த காதலன், அந்த வாகனத்தில் காதலியை ஏற்றிக்கொண்டு தூரத்திலுள்ள பாழடைந்த வீட்டுக்கு சென்றுள்ளார்.

அங்கு வைத்தே காதலியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் காதலன் கைது செய்யப்பட்டார். வைத்தியசாலையில் காதலி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மீன்பூனை நடமாடுவதால் முடங்கிய மக்கள்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காசல்ரீ லெதன்டி தோட்டக் குடியிருப்புகளுக்கு அண்மையில், மீன்பூனை (Fish cat) நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதால் அந்த தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் பெரும் அச்சத்துடன் ஒவ்வொரு நாளையும் கழித்துக்கொண்டிருக்கின்றனர்.

மீன்பூனைகள் தங்களுடைய குட்டிகளுடன் இவ்வாறு நடமாடுகின்றன. பற்றைக்காட்டுக்குள் வசிக்கும் இவ்வாறான மீன்பூனைகள், வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளான நாய்கள், கோழிகளை கொன்று தின்றுவிடுகின்றன என்றும் அம்மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு, நேற்று (21) சுற்றித்திரிந்த மீன்பூனைகள் தொடர்பில், நல்லத்தண்ணி வனஜீவராசிகள் காரியாலய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து, தோட்டத்துக்கு விரைந்த அதிகாரிகள், மீன்பூனைகளின் நடமாட்டத்தை



அவதானித்தனர்.

தோட்டங்களுக்கு அண்மையில் இருக்கும் பற்றைக்காடுகளுக்கு தீ மூட்டுவதால், இவ்வாறான மிருகங்கள், குடியிருப்புகளை நோக்கி படையெடுக்கின்றன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மீன்பிடி பூனைகள் மனிதர்களுக்கு எவ்விதமான தீங்குகளையும் விளைவிக்காத போதிலும், செல்லப்பிராணிகளை கொன்று தின்றுவிடுகின்றன என மக்கள் தெரிவித்துள்ளனர்.

சப்ரகமுவ மாகாணத்தில்

## தோட்ட மாணவர்களுக்கு இலவசமாக பகலுணவு

■ உமாமகேஸ்வரி

இரத்தினபுரி தோட்ட மாணவர்களின் நலன்கருத்தியும், இடைவிலகலை தவிர்க்கும் நோக்கத்துடனும், மாணவர்களுக்கு இலவசமாக பகலுணவு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் நிறைவேற்று அதிகாரி திருமதி குமாரி கொத்தலாவல கூறினார்.

சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களத்தின் வேண்டுகோளுக்கமைய இலங்கை செஞ்சிலுவை சங்கம் பிரித்தானியா செஞ்சிலுவை சங்கத்தின் ஒத்துழைப்புடன் இத்தோட்ட மாணவர்களுக்கு இலவசமாக பகலுணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இரத்தினபுரி மாவட்ட தோட்டமக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இதன் காரணமாக, பெரும்பாலான தோட்டப் பகுதி மாணவர்கள் தமது கல்வியை இடைநடுவில் கைவிடும் அபாயநிலை



காணப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட 10 தோட்ட மற்றும் தோட்ட மாணவர்கள் கூடுதலாக கல்விக்கற்கும் நகர பாடசாலைகள் ஆகியவற்றை உள்ளடக்கி சுமார் 1,300 பேருக்கு முதற்கட்டமாக இலவசமாக பகலுணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை தொடக்கம் வாரத்தில் இரண்டு நாள்கள் பகலுணவு வழங்கப்படும் .

இதற்கென நாள் ஒன்றுக்கு மட்டும் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது என்றார்.

## வீடுக்குள் 2 துப்பாக்கிகளும் கஞ்சா செடிகளும் சிக்கின

■ பாலித ஆரியவங்ச

பசறை, ஹிகுருகடுவ, மொரட்டுகமவில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் இரண்டு கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைத்த தகவலுக்கு அமைய, 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் போதே, துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட 54 வயதானவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, 450 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. அத்துடன் வீட்டுத்தோட்டத்தில் வளர்க்கப்பட்ட 5 அடி உயரமான கஞ்சா செடிகள் ஐந்தும் கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிகள், விலங்குகளை சட்டவிரோதமான முறையில் வேட்டையாடுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## பள்ளத்தில் பாய்ந்த பஸ் பத்திரமாய் மீட்டெடுப்பு



■ சுதத் எச்.எம்.ஹேவா

நோர்டன், தியகல வீதியில் ஹூங்குல வளைவுக்கு அண்மையில் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்கு உள்ளான தனியார் பஸ், பத்திரமாய் மீட்டெடுக்கப்பட்டு, பிரதான வீதிக்கு நேற்று முன்தினம் (20) கொண்டுவரப்பட்டது.

19 ஆம் திகதி இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் பெண்கள் இருவர் உட்பட மூவர் பலியாகினர். ஆணின் சடலம் 12 மணிநேரத்துக்குப் பின்னர் மீட்கப்பட்டது. அத்துடன் இந்தச் சம்பவத்தில் 26 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹோமகம பிரதேசத்தில் இருந்து சிவனொளிபாதமலைக்கு யாத்திரிகளை ஏற்றிக்கொண்டு சென்றிருந்த பஸ், ஹோமாகமவுக்கு திரும்பிக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டிருந்தது.

## சிறுமி துஷ்பிரயோகம் அம்மாவும் காதலனும் கைது

முகப்புத்தகத்தில் நண்பர்களாகி, பின்னர் கள்ளக் காதலனாக்கி உல்லாசத்தில் ஈடுபட்ட பெண்ணொருவர், தன்னுடைய ஏழு வயதான மகளையும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சிறுமியின் தாய் மட்டுமன்றி அவளுடைய கள்ளக்காதலனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுகஸ்தோட்ட பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளே இவ்விருவரையும் கைது செய்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்ட பொலிஸ் பிரிவில் வசிக்கும் இந்தப் பெண்ணின் கணவன், இரண்டு வருடங்களுக்கு முன்னர் மரணமடைந்துவிட்டார்.

முகப்புத்தகத்தின் ஊடாக பலருடன் நண்பர்களாகிய இந்தப் பெண், அதில் ஒருவருடன் கள்ளக்காதல் கொண்டுள்ளார்.

பெண்ணின் வீட்டுக்கு வரும் அந்த நபர், தன்னுடைய கள்ளக்காதலியுடன் பல தடவைகள் உல்லாசமாக இருந்துள்ளார்.

இதனிடையே அப்பெண்ணின் ஏழு வயதான மகளுடன் உறவை வைத்துக்கொள்வதற்கு கள்ளக்காதலியை வற்புறுத்தியுள்ளார். அதற்கு அப்பெண் இடமளித்தும் உள்ளார்.

தனக்கு நேர்ந்த சம்பவம் தொடர்பில் அச்சிறுமி தன்னுடைய மாமியிடம் கூறியுள்ளார். இதுதொடர்பில் மாமியார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்பின்னரே இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

## பரீட்சையில் சித்தி

■ நடராஜா மலர்வேந்தன்



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலை மாணவி தென்னரசு சஜிவனி 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.இவருக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றனர்.



## அல்லித்தோட்ட தீயில் 5 வீடுகள் கருகின

■ யோகேசன், சுதத் எச்.எம்.ஹேவா

கினிகத்ஹேன, கெனில்வேர்த் அல்லித்தோட்டத்தில் உள்ள லயன் குடியிருப்பில் ஏற்பட்ட தீயில், 5 வீடுகள் எரிந்துள்ளன. அந்த வீடுகளில் வசித்த 28 பேர் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வனர்த்தம் நேற்று (21) காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. திடீரென பரவிய தீயை, கினிகத்ஹேன பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

பாதிக்கப்பட்ட வீடுகளைச் சேர்ந்த குடும்பத்தினரில் சிலர், அவர்களின் உறவினர்கள் வீட்டில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் கெனில்வத் இல 2 பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.மின்னொழுக்கு காரணமாக இவ்வனர்த்தம் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் கினிகத்ஹேன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனநாயக உரிமையைத் தேடி அலைய வேண்டிய துர்ப்பாக்கியம்

தேர்தலில் வாக்களிப்பது ஜனநாயக உரிமையாகும். அந்த உரிமையை யாரும் தட்டிப்பறிக்க முடியாது. ஆனால், தேர்தல் நடத்தவேண்டிய காலங்களில், தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது விடயதானத்துக்குப் பொறுப்பான நிறுவனங்களின் கடப்பாடாகும். அதற்கு ஏனைய நிறுவனங்களும் ஒத்திசைந்து ஒத்துழைப்பை நல்கவேண்டும்.

நிறுவனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு இருக்கவேண்டும். இல்லையேல் இழுபறியான நிலைமையே தோற்றுவிக்கப்படும்.

நமது நாட்டை பொறுத்தவரையில், நிறுவனங்களுக்கு இடையிலான இழுபறியே காணப்படுகின்றது. அதனால்தான், நிதியில்லை என்பதை காரணங்காட்டி, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் நடந்துகொள்கின்றன.

வாக்குரிமையும் தேர்தல்களும் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து, அரசியலமைப்பின் XIV ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. எனினும், உரிய நேரத்தில் தேர்தலை நடத்தாமல், காலந்தாழ்த்தும் அரசாங்கம், தங்களுடைய வெற்றி உறுதியானதும் நடத்தும். இவையெல்லாம் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட நாடகங்களாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், அவருடைய முதல் மூன்று தெரிவுகளும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகும். எனினும், ஜனநாயகத்தை பாதுகாத்து, மக்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை வழங்கவேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுகின்றன.

பொதுவெளியில் போராட்டம் நடத்தப்படும் ஏககாலத்தில், பாராளுமன்றத்துக்குள்ளும் போராட்டங்கள் நடத்த, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் பங்காளிகளும் இணைந்திருந்தன. எனினும், தமிழ்க் கட்சிகளும், ஜே.வி.பியும் நேற்றைய போராட்டத்தில் பங்கேற்கவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக ஆட்சியையோ, ஜனாதிபதியையோ மாற்றமுடியாது என்பது உண்மை. ஆனாலும், மக்களின் நேரடி பிரதிநிதியான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் முகங்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். நாட்டை ஆள்வதற்குரிய எல்லா அரசியல் அதிகாரங்களும் நாட்டின் குடிமக்களுக்கே உண்டு என்பது குடியரசின் தத்துவம். குடிமக்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை வாக்குரிமை மூலம் செலுத்துகின்றனர். இந்த உரிமையைப் பயன்படுத்தி, தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, தங்கள் சார்பில் அரசை நடத்திவர அவர்களுக்கு அதிகாரம் அளிக்கின்றனர். எனவே, மக்களாட்சி நடைபெறும் நாட்டில், வாக்குரிமை மிக இன்றியமையாததாகும்.

வாக்களிக்காவிடின் எந்தவிதமான தண்டனையும் இங்கு கிடைப்பதில்லை. எனினும், பெல்ஜியம், ஆஸ்திரேலியா, செக்கோஸ்லோவாக்கியா, மெக்சிக்கோ முதலிய சில நாடுகளில், தேர்தலில் எல்லோரும் வாக்களித்தாக வேண்டும் என்ற சட்டம் உள்ளது. வாக்களிக்காதவர் தக்க காரணம் காட்டவில்லையென்றால் அபராதமோ சிறைத் தண்டணையோ விதிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதில் எத்தனைபேர் வாக்களிப்பார்கள் என்பது சந்தேகமே, பெரும்பாலான மக்களிடத்தில் இந்தத் தேர்தல் கசந்துவிட்டது. எல்லோரும் ஜீவியத்துக்கான வழிகளைத் தேடி அலைகின்றனர். அதேபோலதான், அரசியல்வாதிகளும் இருப்பை தக்கவைத்துக்கொள்ள முயல்கின்றனர். எவ்வாறாக இருந்தாலும் ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்கவேண்டும்.

வாக்களிப்பை கட்டாயப்படுத்தி, வாக்களிக்க தகுதியிருந்தும் வாக்களிகாதவர்களுக்கு ஆகக் குறைந்தபட்சம் அபராதம் விதிக்கும் வகையிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். இல்லையேல் ஜனநாயகத்தை தேடி அலைய வேண்டிய நிலைமை ஏற்படும்.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்


jkpo;kpuu; thrfu;fSf;F tzf;fk;.
vkJ gj;jpupiff;F cq;fSila
Mf;fq;fs;> tpku;rdq;fis
mDg;gpitf;fyhk;. fUJfisAk;
tuNtw;fpd;Nwhk;.

mj;Jld; cq;fs; gpuNjrq;fspy;
,lk;ngWk; tpisahl;L>
fiy> fyhrhu epfo;Tfis
Gifg;glq;fSld;
mDg;gpitf;fyhk;.

gpuNjrj;jpy; epyTk; gpur;rpidfs;
njhlu;gpYk; vOjyhk;.

mDg;gNtz;ba Kftup
jkpo;kpuu;
Mrpupau; gPlk;
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தங்கள் பிரச்சினைகள், துன்பங்கள் போன்றவற்றில் இருந்து விடுவிக்குமாறு இறைவனிடத்தில் பக்தர்கள் கேட்பார்கள். அதேநேரம், தங்கள் வேண்டுதலுடன், 'ஆண்டவரே! இந்த வையகம் தழைத்திட அருள் செய்வாயாக' எனவும் இறைஞ்சினால் சிறப்பானது அல்லவா?

எங்களை அறியாமலே, எங்கள் பிரச்சினைகளை மட்டுமே பெரிது என எண்ணுகின்றோம். சகல உயிர்களுக்கும் இன்ப துன்பங்கள் உண்டு.

எனவே, அதனை உணர்ந்து, உலகம் சிறப்புற வாழ, அனைவரும் எண்ணினால் சக்தி மேம்படும். அதாவது, வேண்டுதல் செய்பவர்களின் மனதும் நிறைவு பெறும்.

மதத் தலைவர்கள், ஆன்மீகவாதிகள் உலகம் முழுவதுக்குமாகவே பிரார்த்தனை செய்கிறார்கள். உலகில் நாமும் ஓர் அங்கத்தினர். எனவே, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களின் பிரார்த்தனைகள், அனைவருக்கும் சேர்ந்துவிடும்.

இறை நம்பிக்கை, நெஞ்சத்தை நெகிழ வைக்கும்; நம்பிக்கையே வாழ்வு.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இலஞ்சமே விதிமுறையான நாட்டில்

## மாட்டினார் மயோன் முஸ்தபா



எம்.எஸ்.எம் ஐயூப்

இலஞ்சம் பெறுவது மட்டுமல்லாது, இலஞ்சம் வழங்குவதும் சட்டத்தில் குற்றமாகவே கருதப்படுகிறது.

ஆனால், அரச அதிகாரிகளும் பொலிஸாரும், தமது சேவையை நாடி வரும் மக்களை நிர்ப்பந்தித்து, அவர்களிடம் இலஞ்சம் பெறுகிறார்கள். கடந்த 17 ஆம் திகதி, கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பாலபட்டபந்திகே, இலஞ்சம் வழங்கிய குற்றத்துக்காக, முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவின் குடியியல் உரிமையை, ஏழு வருடங்களுக்கு இரத்துச் செய்தார். அதற்கு புறம்பாக, முஸ்தபாவுக்கு ஆறு மாத கடூழிய சிறைத் தண்டனையையும் மேதிகமாக 500 ரூபாய் அபராதமும் விதித்தார்.

2010ஆம் ஆண்டு, ஜனாதிபதி தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிட்ட எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குமாறு கூறி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மொஹமட் முஸம்மிலுக்கு 42 இலட்சம் ரூபாய் இலஞ்சமாக வழங்கியதற்காகவே, அவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டது.

தேசிய சுதந்திர முன்னணி, அப்போது மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோடு இணைந்து செயற்பட்டது. இலஞ்சப் பணத்தை பெற்றுக் கொண்ட முஸம்மில், ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தி, நடந்த சம்பவத்தை அம்பலப்படுத்திவிட்டு பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்தார்.

அதற்கான வழக்கு விசாரிக்கப்பட்டு, சுமார் 13 வருடங்களுக்குப் பின்னர் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. நீதிபதி தீர்ப்பை வழங்கும்போது, "பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதியாக இருந்த முஸ்தபா செய்த குற்றத்துக்கு, இதைவிடக் கூடுதலான தண்டனையை வழங்க வேண்டுமாக இருந்த போதிலும், சட்டத்தால் வழங்கக்கூடிய அதியுயர் தண்டனை இதுவே" என்றும் கூறியிருந்தார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் அரசியல் உள்ளடக்கத்தை, பணபலத்தால் மாற்ற எடுத்த முயற்சிக்காக வழங்கப்பட்ட இத்தண்டனையை, ஜனநாயகத்தை மதிக்கும் எவரும் பாராட்டத்தான் வேண்டும். அதேபோல், இலஞ்சப் பணத்தை பெற்றுக் கொண்ட முஸம்மில், கட்சித் தாவல் செய்யாது, இலஞ்சம் தந்தமையை அம்பலப்படுத்திவிட்டு, அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தமையும் சரியானதே!

ஆனால், இச்சம்பவத்தோடு பல கேள்விகள் எழுகின்றன. முதலாவதாக, இந்த விடயத்தில் நேர்மையாக நடந்து கொண்டதாக தெரியும் முஸம்மில், பொதுவாக அரசியலில் நேர்மையானவரா?

முஸ்தபாவும் முஸம்மிலும், ஒரே வேட்பாளரை ஆதரிக்கும் நிலையில், முஸ்தபா, மற்றைய வேட்பாளரின் ஆதரவாளர் ஒருவருக்கு இவ்வாறு இலஞ்சம் வழங்கி இருந்தால் முஸம்மில், முஸ்தபாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பாரா?

இச்சம்பவத்துக்கு முன்னரும் பின்னரும், இதுபோன்ற விடயங்களின் போது, முஸம்மிலும் அவரது கட்சியான தேசிய சுதந்திர முன்னணியும் எவ்வாறு நடந்து கொண்டுள்ளனர் என்பதிலேயே இந்தக் கேள்விக்கு பதில் இருக்கிறது.

2008ஆம் ஆண்டிலேயே, விமல் வீரவன்ச மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அதையடுத்து அவர் ஆரம்பித்த தேசிய சுதந்திர முன்னணி, மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் சகல செயற்பாடுகளையும் ஆதரித்தது; நியாயப்படுத்தி வந்தது. மஹிந்தவின் ஆட்சியானது, ஊழல் மலிந்த அரசாங்கம் என்பதை உலகமே அறிந்த விடயமாகும்.

தனித்தனி சம்பவங்களை எடுத்து ஆராயாவிட்டாலும், ராஜபக்ஷர்களின் ஆட்சியானது ஊழல் மலிந்தது என்பதை உலகமே அறிந்தது என்பதற்கு, அமெரிக்காவில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றே போதுமானதாகும். பொருளாதார நெருக்கடி காரணமாக, கடந்த வருடம் அரசாங்கம் வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்தியதை அடுத்து, இரட்டை தீவு நாடான சென் கிட்ஸ் மற்றும் நெவிஸை தளமாகக் கொண்ட 'ஹமில்டன் ரிசேர்வ் வங்கி', அரசாங்கத்தின் அந்த முடிவை எதிர்த்து, நியூயோர்க் நகர நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது.

ராஜபக்ஷ குடும்பம், பல வருடங்களாகப் பொதுச் சொத்தை சுருட்டியதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து அமெரிக்க செனட் குழு தயாரித்த அறிக்கையிலும் ராஜபக்ஷ குடும்பத்தைப் பற்றி இதேபோல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிறீஸ் நாட்டில் பிணைமுறிகளில், மஹிந்தவின் அரசாங்கம், மத்திய வங்கி பணத்தை முதலீடு செய்து, பல்லாயிரம் கோடி ரூபாய் நட்டத்தை அடைந்ததாகவும், அந்தக் கொடுக்கல் வாங்கலில் பெரும் தொகைப் பணம் கைமாறியதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் வீடமைப்புத் திட்டம் ஒன்றுக்காக பணம் ஒதுக்கப்பட்ட போதிலும், வீடுகள் கட்டப்படவில்லை என்று ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. சட்ட விதிமுறை பிரச்சினை காரணமாக, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட போதிலும், ஒதுக்கப்பட்ட பணத்துக்கு என்ன நடந்தது என்பது இதுவரை எவருக்கும் தெரியாது. இவற்றைப் பற்றி, தேசிய சுதந்திர முன்னணி வாய் திறக்கவில்லை.

மஹிந்தவின் அரசாங்கத்தின் கீழ், விமல் வீரவன்ச வீடமைப்பு அமைச்சராக இருக்கும் போது, முறைகேடாகத் தமது உறவினர்களுக்கு வீடுகளை வழங்கியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

எனவே, இவற்றின் பிரகாரமே முஸ்தபா இலஞ்சம் கொடுத்த விடயத்தில், முஸம்மில் நேர்மையாக நடந்து கொண்டாரா அல்லது அரசியல் இலாபத்துக்காக தேசிய சுதந்திர முன்னணி, இந்த இலஞ்சத்தை அம்பலப்படுத்தி, வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்ததா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

இலங்கையில் குறிப்பாக அரச துறையில், இலஞ்சம் இல்லாமல் எந்தப் பணி நடைபெறுகிறது என்பதே கேள்வியாக இருக்கிறது. குறிப்பாக, இலஞ்சம் கொடுத்து அரசியல்வாதிகளை விலைக்கு வாங்குவது, ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் இடம்பெறுகிறது. 2001ஆம் ஆண்டு, சந்திரிகாவின் அரசாங்கத்திலிருந்து 12 பேர் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்குத் தாவினர். ஒவ்வொருவருக்கும் அப்போது மூன்று கோடி ரூபாய் வீதம் வழங்கப்பட்டதாக கூறப்பட்டது.

2007ஆம் ஆண்டு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட 17 எம்.பிக்கள், ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து மஹிந்தவின் அரசாங்கத்துக்குத் தாவினர். கொள்கைப் பிரச்சினைக்காக ஒருவர் கட்சி மாறலாம். ஆயினும், பலருக்கு கூட்டாக எவ்வாறு 'அரசியல் ஞானம்' பிறக்க முடியும்?

பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்து, குற்றங்களில் இருந்து எத்தனை குற்றவாளிகள் தப்பித்துக் கொள்கிறார்கள்? எத்தனை பேர், மற்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறார்கள்? சுங்கம் என்பது, எவ்வாறான இடம் என்பதை, சில சுங்க அதிகாரிகளின் வீடுகளைப் பார்த்தால் விளங்கிக் கொள்ள முடியும்.

வீடுகளுக்கான வரைபடங்களுக்கு உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களில் அனுமதி பெறும் போது, தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்காது அதைச் செய்து கொண்டவர்கள் மிகச் சிலரே, நாட்டில் இருக்க முடியும். நீதிமன்றங்கள் கூடாத போயா தினமொன்றில், சிறையில் இருந்த முன்னாள் கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமத்திபாலவுக்கு பிணை வழங்கிய நீதிபதியின் சேவை இடைநிறுத்தப்பட்டது.

இலங்கைக்கு பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரத் தயங்குவதற்கு, அவர்களது முதலீடுகளுக்கு அனுமதி வழங்கும் போது, அதிகாரிகள் இலஞ்சம் கோருவதே காரணம் என்பது பொது அறிவு. சந்திரிகாவின் காலத்தில் இது போன்றதொரு பிரச்சினைக்காக, முதலீட்டுச் சபைத் தலைவர் ஒருவர் சிக்கிக் கொண்டார்.

பல பொலிஸ் மாஅதிபர்களும் நீதியரசர்களும் ஓய்வு பெற்றதன் பின்னர், வெளிநாடுகளில் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களது பதவிக் காலத்தில், அவர்கள் எவ்வாறு நடந்த கொண்டு இருப்பார்கள் என்ற சந்தேகம் எழுவது இயல்பாகும். அதன் அடிப்படையில், அவர்களின் தூதுவர் பதவிகள் இலஞ்சமாகவே தெரிகிறது.

அதாவது, அரச அலுவலகங்களில் மிகவும் உயர்மட்ட அதிகாரிகள் முதல் சிற்றூழியர் வரை, பெரும்பாலானவர்கள் மத்தியில் இலஞ்சமானது சர்வசாதாரணமான விடயமாகும். அவர்களில் மிகச் சிலரே, சட்டத்தின் முன் ஆஜராக்கப்பட்டு தண்டிக்கப்படுகின்றனர். அந்தநிலையில் தான், முஸ்தபாவும் தண்டிக்கப்பட்டுள்ளார். அதுதான் முஸ்தபா தொடர்பிலான வழக்கின் முக்கியத்துவமாகும்.

பொதுவாக, இலஞ்ச குற்றத்துக்காக அபராதமும் சிறைத் தண்டனையுமே வழங்கப்படுகிறது. அரசியல்வாதிகள் விடயத்திலேயே பெரும்பாலும் குடியியல் உரிமை (Civic rights) இரத்துச் செய்யப்படுகின்றது. இவ்வாறு தண்டிக்கப்பட்டவரின் குடியுரிமை (Citizenship) இரத்தாவதில்லை. அவரது வாக்குரிமையே இரத்தாகிறது. அதன் மூலம் அவர், தேர்தல்களில் போட்டியிடும் உரிமையும் இரத்தாகிறது.

1959ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி, முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க சுட்டுக் கொல்லப்படுவதற்கு இரண்டு வரங்களுக்கு முன்னர், சில அமைச்சர்கள் உள்ளிட்ட தமது அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் மீதான இலஞ்ச குற்றச்சாட்டுகளை விசாரிக்க, நீதிபதி தல்கொடபிட்டியவின் தலைமையில் ஆணைக்குழுவை நியமித்தார். பண்டாரநாயக்கவின் மரணத்தின் பின்னர், 1960ஆம் ஆண்டு அதன் அறிக்கை வெளியிடப்பட்டது. அதன்படி சி.ஏ.எஸ் மரிக்கார், எம்.எஸ் காரியப்பர் உள்ளிட்ட ஐவர் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள். ஆனால், ஆட்சியில் இருந்த சிறிமா பண்டாரநாயக்க, அவர்களைத் தண்டிக்கவில்லை. அடுத்து பதவிக்கு வந்த டட்லி சேனாநாயக்க அரசாங்கத்தின் கீழ், அவர்களது குடியியல் உரிமை ஏழு வருடங்களுக்கு இரத்துச் செய்யப்பட்டது.

1980ஆம் ஆண்டு, ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் அரசாங்கத்தின் கீழ், அதிகார துஷ்பிரயோகம், ஊழல் குற்றங்களுக்காக முன்னாள் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க, அவரது அமைச்சரவையில் மூத்த அமைச்சராக இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க ஆகியோரின் குடியியல் உரிமை, ஏழு வருடங்களுக்கு இரத்துச் செய்யப்பட்டமையும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## கடிதங்கள்

### கிண்ணியா பல்கலைக் கல்லூரியை

# புனரமைக்குமாறு கோரிக்கை

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உப்பாறு பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பல்கலைக் கல்லூரி, கவனிப்பாரற்ற நிலையில், பற்றைக்காடுகள் வளர்ந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பல்கலைக் கழக கட்டங்களின் கண்ணாடிகள், கதவுகள் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு உள்ளதாகவும் பல்கலைக்கழக பெயர் பலகைகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றியுள்ள வேலிகளும் வெட்டி எடுக்கப்பட்டுள்ளதோடு கூரைத்தகடுகளும் களவாடப்பட்டு உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், பல மில்லியன் ரூபாய் செலவு செய்து நிர்மாணிக்கப்படும் கட்டடம், மதுப் பிரியர்களின் கூடாரமாகவும் மாறியிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

பாதியில் நிறுத்தப்பட்டுள்ள கிண்ணியா பல்கலைக் கல்லூரியை, விரைவில் பூர்த்தி செய்து தருமாறு அப்பகுதி மக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர் .

இப்பல்கலைக் கழக கல்லூரி அமையப்பெறுவதற்கு காரணமான திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் .எஸ் தௌபிக்கிடம் இது குறித்து வினவிய போது, "இந்தப் பல்கலைக்கழகம் 2018ஆம் ஆண்டு, 12,000 ஏக்கர் நிலப்பரப்பில், முதற்கட்டமாக ஐம்பது மில்லியன் ரூபாய் செலவில் சுற்று வேலி வேலைத் திட்டமும் உத்தியோகத்தர்களுக்கான விடுதியும் கட்டி முடிக்கப்பட்டு, கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்த நிலையிலேயே கைவிடப்பட்டுள்ளன. கடந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் முடக்கப்பட்டு, தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியால் வேலைகளை ஆரம்பிக்க முடியாத நிலையில் உள்ளதால், இடை நிறுத்தப்பட்டு உள்ளது" என்றார்.

எப். முபாரக்

துருக்கி

# 3600 உயிர்களைக் காப்பாற்றிய நாயகர்கள்



துருக்கி- சிரிய எல்லையில் கடந்த 6 ஆம் திகதி ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கமானது முழு உலகையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்நிலநடுக்கத்தால் இருநாடுகளையும் சேர்ந்த சுமார் 40,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில் பாதிப்படைந்த பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

அதேசமயம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு இந்தியா சார்பில் மருத்துவ குழு அடங்கிய இராணுவ குழுவினர் துருக்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் மீட்பு பணிகள் நிறைவடைந்த நிலையில் இந்தியாவுக்குத் திரும்பிய இராணுவக் குழுவினர் ” துருக்கியில் சுமார் 3600 பேரின் உயிரைத் தாம் காப்பாற்றி உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இந்திய லெப்டினன்ட் கர்னல் ஆதர்ஷ் சர்மா கருத்துத் தெரிவிக்கையில் ”இப் பேரிடரை எதிர்கொள்ள எங்களை அனுப்பி வைக்க அரசாங்கம் எடுத்த முடிவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.எமது குழுவினரால் துருக்கியில் 3,600 பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன” என்றார்.

திருவனந்தபுரம்

# மது அருந்த வைத்து மாணவன் பலாத்காரம்

### ஆசிரியை கைது



ஆசிரியையொருவர் தன்னிடம் கல்வி கற்கும் மாணவனை பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் கேரளாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம், திருச்சூர் அருகேயுள்ள ஒரு தனியார் பாடசாலையொன்றில் கல்வி கற்றுவரும் 10 ஆம் தரத்தைச் சேர்ந்த மாணவனொருவனே இவ்வாறு தனது ஆசிரியையால் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக குறித்த மாணவனின் நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானித்த அப்பாடசாலை ஆசிரியர்கள் சிலர், அம் மாணவனுக்கு கவுன்சிலிங் வழங்க முடிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து அம்மாணவனுக்கு நடத்தப்பட்ட கவுன்சிலிங்கில் ” அம் மாணவன் தான் மேலதிக வகுப்பு ஆசிரியையொருவரால் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தன்னை மது அருந்த வைத்து பலாத்காரம் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த ஆசிரியர்கள், இது குறித்து உடனடியாகப் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் குறித்த ஆசிரியையிடம் மேற்கொண்ட விசாரணையில் ” அவர் தான் குற்றம் புரிந்ததை ஒப்புக் கொண்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவரை பொலிஸார், போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.



கேரளா

# கறுப்புப் பணத்தில் புரளும் மலையாளத் திரையுலகம்

கேரளாவில் கடந்த டிசம்பர் மாதம் பிரபல மலையாள திரைப்படத் தயாரிப்பாளர்களான ஆன்டனி பெரும்பாவூர், ஆன்டோ ஜோசப், லிஸ்டின் ஸ்டீபன், நடிகரும், தயாரிப்பாளருமான பிரித்விராஜ் உள்ளிட்ட பலரின் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் வருமானவரித் துறையினர் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இந்நிலையில் இச் சோதனை குறித்த விவரங்கள் தற்போது வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில் மலையாளத் திரையுலகில் இந்திய மதிப்பில் 225 கோடி ரூபாய்க்கு, கறுப்புப் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இதன் மூலம் வருமானவரித் துறைக்கு 72 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதே சமயம் பிரபல தயாரிப்பாளர்கள் வெளிநாடுகளில் சொத்துக்கள் வாங்கிக் குவித்துள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் மலையாள படங்களை வெளிநாடுகளுக்கு விநியோகிப்பதன் மூலமும் பாரிய மோசடி நடத்தப்பட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இவர்களது வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் குறித்தும் வருமானவரித் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# 6 ஆம் ஆண்டில் மக்கள் நீதி மய்யம்

தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகராக வலம் வருபவர் நடிகர் கமல்ஹாசன்.

இவர் கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி ‘ மக்கள் நீதி மய்யம்‘ என்னும் அரசியல் கட்சியைத் தொடங்கினார். இந்நிலையில் இது குறித்து கமல் தனது டுவிட்டரில் ” ஆரம்பித்த துடிப்புக் குறையாமல், ஐந்து ஆண்டுகளைக் கடந்திருக்கிறது மக்கள் நீதி மய்யம். ஆறாம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளோம். உள்ளத்தில் எரியும் அறத்தழல் ஒளி குன்றாமல் பார்த்துக்கொள்வோமாக. ம.நீ.ம உறவுகள், நற்பணி இயக்க நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வாழ்த்துகள் எனப் பதிவிட்டுள்ளார்.

மத்திய பிரதேசம்



# சப்பாத்தி சுட்டதால் பரபரப்பு

மத்திய பிரதேச மாநிலம், கட்னி மாவட்டத்தில் உள்ள தனியார் பாடசாலை விடுதியொன்றில் 6 முதல் 8-ம் வகுப்பு வரையிலான மாணவிகள் தங்கிப் படித்து வருகின்றனர். இம்மாணவிகள் அண்மையில் பாடசாலைச் சீருடை அணிந்தபடி சப்பாத்தி உள்ளிட்ட உணவு பொருட்களைத் தயார் செய்யும் வீடியோவொன்று சமூக வலைதளங்களில் வெளியாகி பெற்றோர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

மேலும் குறித்த வீடியோவில் பல்வேறு சமையல் பணிகளில் மாணவிகள் ஈடுபடும் காட்சிகளும் பதிவாகி இருந்தன.

இந்நிலையில் இவ்வீடியோ வானது வைரலானதைத் தொடர்ந்து, குறித்த விடுதி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பீகார்

# தொலைபேசியை விழுங்கிய இளைஞர்

பீகாரில் சிறை அதிகாரிகள் ஆய்வுக்கு வருவதை அறிந்த கைதி ஒருவர் தொலைபேசியை விழுங்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோபால்கஞ்ச் மாவட்டத்திலுள்ள சிறைச்சாலையொன்றில் அடைக்கப்படிருந்த கைஷர் அலி ( Qaishar Ali ) என்ற கைதிக்கு அண்மையில் திடீரென வயிற்று வலி ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் உடனடியாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவரது வயிற்றில் தொலைபேசி ஒன்று இருப்பதைக்கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.



இதனையடுத்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ” சிறை அதிகாரிகள் ஆய்வுக்கு வருவதை அறிந்ததால் பதற்றத்தில் தான் தொலைபேசியை விழுங்கியதாகத்” தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து கைஷர் அலியின் வயிற்றிலிருந்து அறுவைச் சிகிச்சை மூலம் தொலைபேசி அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அமைச்சரவை முடிவுகள் சில

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், 2023.02.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளில் சில.**

## காலாண்டு முடிவிலான முன்னேற்றம்

பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 261 இற்கு ஏற்புடைய 2022 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்கான முன்னேற்றங்கள் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த அறிக்கை அமைச்சரவையின் கவனத்தில் எடுக்கப்பட்டது.

ஒருசில கருத்திட்டங்களுக்குரிய வெளிநாட்டு நிதி இடைநிறுத்தப்பட்டதும், நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமைகளால் தேவையான நிதியை வழங்குவதற்கு சிரமமாக இருந்தமையாலும், அதிகளவான கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள் மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்படுகின்றது.

அனைத்து செயற்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ள ஒருசில கருத்திட்டங்களை தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கான வசதிகள், நியதிச்சட்டமுறை அதிகாரங்கள் மற்றும் தொழிநுட்ப சேவைகள் போன்றன குறித்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்திய அமைச்சின் குறிக்கோள் மற்றும் விடயத்தலைப்புக்களுடன் அல்லது ஏற்புடைய ஏனைய நிறுவனங்களின் கடமைகளில் உள்ளடக்கப்படாமையால், அக்கருத்திட்டங்களின் நிலைபேற்றுத் தன்மைக்கு இடர்கள் நிலவுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

அவ்விடயங்களைக் கருத்தில் கொண்டு, அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றின் பெறுபேறுகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அந்தந்த கருத்திட்டங்களை மேற்கொள்கின்ற நிரல் அமைச்சுக்களுக்குப் பொறுப்புக்களை ஒப்படைக்கும் வகையில் அபிவிருத்தி முதலீடுகளின் முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகளை உள்ளடக்கி, ஒவ்வொரு நிரல் அமைச்சுக்கும் நிறுவன ரீதியான பெறுபேறுகள் அடிப்படையிலான சட்டகமொன்றும், மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான முதலீட்டுப் பெறுபேறுகள் அடிப்படையிலான சட்டகமொன்றும் தற்போது தாபிக்கப்பட்டுள்ள தேசிய தொழிற்பாட்டு மையத்தால் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கிகாரம்

## சரணாலயமாகப் பிரகடனப்படுத்தல்

பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேச செயலகப் பிரிவு எல்லை, சொரணாதொட்ட பிரதேச செயலகப் பிரிவின் திக்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடல் மட்டத்திலிருந்து 1,450 மீற்றருக்கும் அதிகமான உயரத்தில் மலைத்தொடர் அமைந்துள்ளது.

இம்மலைத்தொடர் மிகவும் முக்கியமான நீரேந்துப் பிரதேசமாகக் காணப்படுவதுடன், அங்கு 100 இற்கு மேற்பட்ட நீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றதுன. குறிப்பாக, இம்மலைத்தொடரிலிருந்து கமஓயா, மொரகொல்ல ஓயா, மற்றும் அம்பன்கங்கை ஓயா போன்றன ஆறுகள் குறித்த நாரங்கல மலைத்தொடர் நீர் ஊற்றுக்களின் மூலங்களிலிருந்து ஆரம்பிக்கின்றது.

இம்மலைத்தொடருக்கு அடிவாரத்தில் அமைந்துள்ள பல கிராமங்களுக்கான நீர் தேவை இவ் ஆறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றது. அத்துடன் குறித்த மலைத்தொடர் பகுதி உயிர்ப்பல்வகைமையுடன் கூடிய பிரதேசமாகும். இவ்விடயங்களைக் கருத்தில் கொண்டு, மலைத்தொடர் அமைந்துள்ள 239.276 ஹெக்ரயார் நிலப்பகுதியை நாரங்கல சராணாலயம் எனப் பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## நிபந்தனைகளைத் திருத்தம் செய்தல்

அரசு சாரா உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பைத் தொடர்வதற்காக வழங்கப்படுகின்ற வட்டியல்லா கடன்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைத் திருத்தம் செய்தல் தொடர்பாக 2022.08.22 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அரசு சாரா உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பை தொடர்வதற்காக மாணவர்களுக்கு வழங்கப்படும் வட்டியல்லா கடன்திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு செல்வது பற்றி இலங்கை வங்கி, திறைசேரி, மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கிடையில் கலந்துரையாடப்பட்டது.

உடன்பாடுகளுக்கமைய அப்பாடநெறிகளைப் பூர்த்தி செய்த பின்னர் பாடநெறிக்கான கட்டணத்தை எட்டு (08) வருடங்களில் தவணை அடிப்படையில் மீளச் செலுத்துவதற்கும், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திருத்தம் செய்வதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## கட்டணங்களில் திருத்தம்

ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவைகளை வழங்கும் போது அறவிடப்படும் கட்டணங்களை திருத்தம் செய்வதற்காக இதற்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஏற்பாடுகளை தயாரிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் ஆட்களைப் பதிவு செய்தல் ஒழுங்குவிதிகள் இலக்கம் 1 இனைத் திருத்தம் செய்து தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூல ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும், பின்னர் குறித்த ஒழுங்கு விதிகளை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## தேசிய பாதுகாப்பு சபை தாபிப்பதற்கான சட்டமூலம்

1999 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் தேசிய பாதுகாப்பு சபையானது தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்கும், மற்றும் அதனுடன் தொடர்புடைய உள்ளூர், சர்வதேச, பொருளாதார மற்றும் இராணுவக் கொள்கைகள் ஒருங்கிணைப்பு போன்றவற்றை மேற்கொள்கின்ற அடிப்படை நிறைவேற்று நிறுவனமாக இயங்குகின்றது. 2023.01.12 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் மூலம் தேசிய பாதுகாப்பு சபைக்கு நியதிச்சட்ட முறையுடனும்;, மற்றும் தெளிவான கட்டமைப்புடன் கூடியதாக தாபிக்க வேண்டிய தேவை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய பாதுகாப்பு சபை பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் சட்டபூர்வமாக்குவதற்கு இயலுமாகும் வகையில் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## தேசிய விருது வழங்கல்

இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் பல்வேறு துறைகளில் ஆற்றிய சேவைகளைப் பாராட்டுமுகமாக தேசிய விருது வழங்கல் 1986 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1995.03.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஜனாதிபதிகளால் இலங்கையர்களுக்கான ஸ்ரீலங்காபிமானம், தேசமான்ய, தேசபந்து, வித்யாஜோதி, கலாகீர்த்தி, ஸ்ரீலங்கா சிகாமணி, வித்யாநிதி, கலாசூரி, ஸ்ரீலங்கா திலகம், வீரபிரதாப போன்ற முறைசார்ந்த நடபடிமுறைகளுக்கமைவான விருதுகள் வழங்கப்படுகின்றன.

அத்துடன் 1990.09.12 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய ஸ்ரீலங்காரஞ்சன, ஸ்ரீலங்காரத்ன மற்றும் ஸ்ரீலங்காரம்ய போன்ற விருதுகள் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

அத்துடன் 2008.02.08 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய ஸ்ரீலங்கா மிதரவிபூசன விருது இலங்கை மக்களுக்கு வழங்கிய ஒத்துழைப்புக்களைப் பாராட்டி இலங்கையுடன் நல்லுறவுகளைப் பேணுகின்ற அரச தலைவர்களுக்கு வழங்கிக் கௌரவிப்பதுடன், இவ்விருது இலங்கையர் அல்லாதவர்களுக்கு வழங்கப்படுகின்ற தேசிய விருதுகள் வரிசையில் உயரிய விருதாகும். தற்போது குறித்த தேசிய விருதுகளில் குறிப்பிடத்தக்க வெற்றிடங்கள் காணப்படுவதுடன், முறைசார்ந்த படிமுறைகளைக் கடைப்பிடித்து தேர்ந்தெடுக்கப்படும் தகைமைவுடையவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

அத்துடன், குறித்த விருதுகளுக்கு மேலதிகமாக கலை, இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் போன்ற துறைகளின் மேம்பாட்டுக்காக ஆற்றிய சேவைகளைப் பாராட்டுவதற்காக விசேட கௌசல்யாபிமானி விருது தேசத்திற்கு வழங்கிய பெரும் அர்ப்பணிப்பைப் பாராட்டுவதற்காக விசேட குடியரசு அபிமான விருது இலங்கையர்களுக்கு வழங்குவது பொருத்தமானதெனவும் அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடபடிமுறைகளுக்கு அமைவாக விண்ணப்பங்களைக் கோரி விருது வழங்குவதற்கான தெரிவுகளுக்கும், முறைசாரராத வகையில் வேறு நிறுவனங்கள் மூலம் தேசிய விருது வழங்குவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைத் தயாரித்து பாராளுமன்ற சட்டத்தை நிறைவேற்றுவதற்கும் ஏற்புடையவாறு கௌரவ ஜனாதிபதி சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

# இன்ப அதிர்ச்சி கொடுத்த பைடன்



நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த ஒரு வருட காலமாக உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம் முன்னறிவிப்பில்லாத திடீர் பயணமாக உக்ரேன் சென்று அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பினையடுத்து போரில் உயிரிழந்த உக்ரேன் வீரர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து பைடன் மரியாதை செலுத்தினார்.

மேலும் பீரங்கி வெடிபொருட்கள், கவச எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் வான் கண்காணிப்பு ரேடார்கள் உள்ளிட்ட 500 மில்லியன் டொலர் மதிப்புள்ள இராணுவ உதவிகளை உக்ரேனுக்கு வழங்குவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

பாகிஸ்தான்

## திருமணத்திற்குச் சென்றவர்களுக்கு இறுதி அஞ்சலி



பாகிஸ்தானில் திருமண விழாவொன்றுக்குச் சென்று விட்டு வீடுதிரும்பிய 15 பேர் விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற திருமண நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட 75 க்கும் மேற்பட்டோர் பஸ்ஸொன்றில் லுாகூர் நோக்கிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் எதிர்பாராத விதமாக குறித்த பஸ்ஸானது வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளமொன்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 15 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மேலும் 60 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் .



துருக்கி

## துருக்கியில் மீண்டும் நிலநடுக்கம் 3 பேர் பலி; 213 பேர் காயம்

துருக்கி- சிரியா எல்லையில் கடந்த 06 ஆம் திகதி 7.8 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நில நடுக்கமொன்று ஏற்பட்டது.

இதில் இருநாடுகளையும் சேர்ந்த சுமார் 40,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதே சமயம் பல லட்சம் மக்கள் வீடுகளை இழந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாகினர்.


இந்நிலையில் துருக்கி, சிரியாவில் நேற்று முன்தினம் இரவு மீண்டும் 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கமொன்று ஏற்பட்டது.

ஐரோப்பிய மத்தியதரைக் கடல் நில அதிர்வு மையத்தின் கூற்றுப்படி, ஹடாய் மாகாணத்திற்கு அருகிலுள்ள துருக்கி-சிரியா எல்லைப் பகுதியில் 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் துருக்கியின் தெற்கு ஹடாய் மாகாணமான அனடோலுவில் ஏற்பட்ட இரண்டு புதிய நிலநடுக்கங்களில் 3 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 213 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா

## பிரான்ஸ் ஜனாதிபதிக்கு மிரட்டல் விடுத்த ரஷ்யா



உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா கடந்த ஒரு வருட காலமாக தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன்காரணமாக அமெரிக்கா,பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளும் ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொண்டு பதில் தாக்குதல் நடத்துவதற்கு உக்ரேனுக்கு பல மில்லியன் மதிப்புள்ள இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்நிலையில் அண்மையில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரோன் " உக்ரேனால் ரஷ்யா தோற்கடிக்கப்பட வேண்டும் என தான் விரும்புவதாகவும், அதே வேலை அங்கு புதினுக்கு மாற்றாக வேறொரு தலைவரை விரும்பவில்லை என்றும் "தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அவரது கருத்துக்கு

பாகிஸ்தான்

## இம்ரான்கானுக்கு பிணை



பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் அருகே கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற வன்முறை சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில், அந்நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு, லாகூர் உயர்நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

இம்ரான்கான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது அவரது தெஹ்ரீக் -இ- இன்சாப் அமைப்பானது பல்வேறு நாடுகளிலிருந்து சட்டவிரோதமாக நிதி பெற்றிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ் வழக்கில் தேர்தல் ஆணையத்தால் இம்ரான்கான் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இதையடுத்து தேர்தல் ஆணைய அலுவலகம் முன் இம்ரான்கான் ஆதரவாளர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ் வழக்கில் அவர் கைது செய்யப்படலாம் என தகவல் வெளியானது. இதனையடுத்து பிணை கேட்டு லாகூர் உயர் நீதிமன்றத்தில் அவர் மனுத்தாக்கல் செய்தார்.

இந்நிலையில் இம்ரான்கானுக்கு மார்ச் 3ஆம் திகதி வரை பிணை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தாய்லாந்து

## மனைவிக்காக இப்படியா செய்வது?

தாய்லாந்தின் சரபுரி மாகாணத்தைச் சேர்ந்தவர் ‘வால்‘. இவருக்கு கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் தனது 8 ஆவது ஆண்டு திருமண நாளைக் கொண்டாடும் வகையில் வால், தனது மனைவிக்கு வித்தியாசமான பரிசொன்றைக் கொடுக்க விரும்பியுள்ளார்.

இதனையடுத்து பச்சை குத்தும் நிலையமொன்றுக்குச் சென்ற அவர் தனது திருமண சான்றிதழை மணிக்கட்டில் முழுதாகப் பச்சை குத்தியுள்ளார்.

இதற்கு அவர் சுமார் 8 மணி நேரம் ஒரே



இடத்தில் அமர்ந்திருக்க வேண்டியிருந்துள்ளதாக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவரது கையைப் பார்த்த மனைவில் அதிர்ச்சியில் உறைந்து போனார் எனவும் தனது கைப் பார்க்கும் போதெல்லாம் தான் மனைவியுடன் கழித்த நல்ல நேரங்கள் நினைவுக்கு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.





காக்காச்சிவட்டை விழிக்கதிர் விளையாட்டுக் கழகத் தொடர்:

# சம்பியனான களுவாஞ்சிக்குடி மக்ஸ்

அஸ்ஹர் இப்றாஹீம்

மட்டக்களப்பு மாவட்ட காக்காச்சிவட்டை விழிக்கதிர் விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் களுவாஞ்சிக்குடி மக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

32 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற எட்டு ஓவர்கள் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் பிரிலியன்ட் விளையாட்டுக் கழகத்தை வென்றே மக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மக்ஸ் 8 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 100 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிரிலியன்ட், 7.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 29 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 70 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சம்பியனான மக்ஸ் வெற்றிக் கிண்ணத்தையும் 20,000 ரூபாய் பணப்பரிசிலையும் பெற்றுக் கொண்டது.

இது இவ்வாண்டில் மக்ஸால் பெறப்பட்ட இரண்டாவது கிண்ணமாகும்.

இந்தியாவுக்கெதிரான இறுதி இரண்டு டெஸ்ட்களிலும்

## வோர்னர், ஹேசில்வூட் இல்லை

இந்தியாவுக்கெதிரான இறுதி இரண்டு டெஸ்ட் போட்டிகளிலிருந்தும் அவுஸ்திரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் டேவிட் வோர்னர், முழங்கை வெடிப்பு காரணமாக விலகியுள்ளார்.

எவ்வாறாயினும், ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கு வோர்னர் இந்தியாவுக்குத் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், உபாதை காரணமாக ஜொஷ் ஹேசில்வூட்டும் இறுதி இரண்டு டெஸ்ட்களிலும் விளையாட முடியாமல் போயுள்ளது.

இவர்கள் இருவருக்கும் பதிலாக பிரதியீடுகளை அவுஸ்திரேலியா அழைக்காது எனத் தெரிகிறது.



துறையூர் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட

## பூப்பந்தாட்டப் பயிற்சி முகாம்

அஸ்ஹர் இப்றாஹீம், நூருல் ஹூதா உமர்

சம்மாந்துறை பிரதேசத்தில் பூப்பந்தாட்ட விளையாட்டைப் பிரபல்யப்படுத்தி இளைஞர்களை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தயார் படுத்தும் நோக்கத்தோடு அனைத்துக் கழக வீரர்களையும் உள்ளடக்கியதாக துறையூர் விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூப்பந்தாட்ட பயிற்சி முகாமானது, சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத் தொகுதியிலுள்ள பூப்பந்தாட்ட விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது.



தென்னாபிரிக்காவுக்கெதிரான ODI–களுக்கான

## மே. தீவுகளுக்கான குழாமில் கப்ரியல், சேஸ்



தென்னாபிரிக்காவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டி (ODI) தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் குழாமில் ஷனொன் கப்ரியல் இடம்பெற்றுள்ளார்.

அந்தவகையில், கடந்த 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்குப் பின்னர் கப்ரியல் ஒருநாள் சர்வதேசப் போட்டியொன்றில் விளையாடவுள்ளார்.

இதேவேளை, றொஸ்டன் சேஸும் ODI குழாமுக்கும், இருபதுக்கு- 20 சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமுக்கும் அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இருபதுக்கு-20 குழாமில் ஒபெட் மக்கோய் இடம்பெற்றுள்ளபோதும், மருத்துவ ரீதியாக தேறினாலே அவர் விளையாடவுள்ளார்.

ODI குழாம்: ஷே ஹோப் (அணித்தலைவர்), பிரண்டன் கிங், ஷமராஹ் ப்ரூக்ஸ், நிக்கலஸ் பூரான், கேசி கார்ட்டி, றொஸ்டன் சேஸ், அகீல் ஹொஸைன், யனிக் கரியாஹ், கைல் மேயர்ஸ், றொவ்மன் பவல் (உப அணித்தலைவர்), ஜேஸன் ஹோல்டர், றொமாறியோ ஷெப்பர்ட், ஒடியன் ஸ்மித், அல்ஸாரி ஜோசப், ஷனொன் கப்ரியல்.

இ-20 குழாம்: ஜோன்ஸன் சார்ள்ஸ், பிரண்டன் கிங், ஷமராஹ் ப்ரூக்ஸ், நிக்கலஸ் பூரான், கைல் மேயர்ஸ் (உப அணித்தலைவர்), றொவ்மன் பவல் (அணித்தலைவர்), ஜேஸன் ஹோல்டர், றேமன் றீஃபயர், றொமாறியோ ஷெப்பர்ட், ஒடியன் ஸ்மித், யனிக் கரியாஹ், அகீல் ஹொஸைன், ஷெல்டன் கோட்ரல், அல்ஸாரி ஜோசப், ஒபெட் மக்கோய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 22 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.